# வைப்பகம்

**அறிவுத் தேடலின் மையம்**

2021 சனவரி - மார்ச்சு மலர் 6 இதழ் 1 - 3

ரூ. 20/-


02 இடர்நேர்வு மட்டுப்படுத்தப்பட்ட நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டு அணுகுமுறை

12 பொதுக் கொள்வனவில் பணத்திற்கான பெறுமதியினை மேம்படுத்துவதற்காக ஒப்பந்த முகாமைத்துவத்தினை வலுப்படுத்தல்

19 நாணயக் கொள்கை நவீனமயப்படுத்தல் - உலகளாவிய நோக்கு மற்றும் இலங்கையின் அனுபவம்

27 தரவுத் தூண்டல் டிஜிட்டல் பொருளாதாரத்தின் வாய்ப்புக்களும் சவால்களும்


**இலங்கை மத்திய வங்கி**
**தொடர்பூட்டல் திணைக்களம்**

ஆண்டுச் சந்தா (அஞ்சல் கட்டணம் உட்பட): ரூ.320/-

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் எழுத்தாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை

# இடர்நேர்வு மட்டுப்படுத்தப்பட்ட நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டு அணுகுமுறை

ஜே.எம்.எச்.டி.கே. பண்டார
உதவிப் பணிப்பாளர்
பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

ஜே.எல்.எஸ்.ஏ. குணதுங்க
உதவிப் பணிப்பாளர்கள்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

1. நீடித்தநிலைத்திருக்கும் முதலீடுகளைச் செய்தல்

நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளை மேற்கொள்ளும் கோட்பாடு என்பது நவீன முதலீட்டு உபாயமொன்றாகும். இதில், முதலீடுகள் நிதியியல் பெறுபேறுகளை அடைவதற்கு மாத்திரம் மேற்கொள்ளப்படுவது மட்டுமன்றி சாதகமான சமூக மற்றும் சூழல் தாக்கங்களையும் எதிர்பார்த்தே மேற்கொள்ளப்படுகிறது. பொறுப்பு வாய்ந்த முதலீடுகளில் ஈடுபடுவதன் மூலம் பாரம்பரிய நிதியியல் இலாபங்களிலிருந்து விலகி உலகின் மிகச் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாக திறன்மிக்க முதலீட்டு முறையொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளை மேற்கொள்வதென்பது சமூக ரீதியில் பொறுப்புமிக்க முதலீடு அல்லது ஒழுக்கவியல் சார்ந்த முதலீடு என பொதுவாக அடையாளம் காணப்படுகிறது. இங்கு சூழல், சமூகம் மற்றும் ஆளுகை தொடர்பான பரிசீலனைகள் முதலீட்டுச் செய்முறைக்குள் ஒருங்கிணைக்கப்படுகின்றன (கவெல் - பிளான் கார்ட் மற்றும் மொனஜொன் 2012).

ஆகவே, நீடித்துநிலைத்திருக்கக்கூடிய முதலீட்டாளர்கள் சமூகத்

அட்டவணை 1: முக்கியமான சூழல் சமூக ஆளுகை மூலங்கள்

| சூழல் முறை | சமூகம் | ஆளுகை |
|---|---|---|
| உயிரியல் பல்லியனத்தன்மை/ நிலப் பயன்பாடு | சமூகத் தொடர்புகள் | பொறுப்புக்கூறும் தன்மை |
| கார்பன் வெளியேற்றம் | சர்ச்சைக்குரிய வியாபாரங்கள் | பொறுப்பேற்பதற்கெதிரான வழிமுறைகள் |
| காலநிலை மாற்ற இடர்நேர்வுகள் | வாடிக்கையாளர் தொடர்புகள்/ உற்பத்தி | சபையின் அமைப்பு/ அளவு |
| வலுவின் பயன்பாடு | பல்லினப் பிரச்சனைகள் | இலஞ்சம் மற்றும் ஊழல்கள் |
| மூலப்பொருட்களின் மூலம் | ஊழியர் தொடர்புகள் | முதன்மை நிறைவேற்று அலுவலர் இரட்டைத்தன்மை |
| ஒழுங்குமுறைப்படுத்தல்/ சட்ட இடர்நேர்வு | சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு | நிறைவேற்று இழப்பீட்டுத் திட்டங்கள் |
| வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் | மனித மூலதன முகாமைத்துவம் | சொத்துரிமை அமைப்பு |
| கழிவு மற்றும் மீளச்சுழற்சிப்படுத்தல் | மனித உரிமைகள் | பங்குடமையாளர் உரிமைகள் |
| நீர் முகாமைத்துவம் | பொறுப்பான சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | வெளிப்படைத்தன்மை |
| வானிலை நிகழ்வுகள் | தொழில்சங்கங்களுடனான உறவுகள் | வாக்களிக்கும் நடைமுறைகள் |

கம்பனி சமூகப் பொறுப்பாண்மை முன்னெடுப்புக்கள், கார்வாட் கென்னடி பாடசாலை, 2018

தொடர்புகள், தொழிலாளர் நிலைமைகள், சுற்றுச்சூழல் பற்றிய உறுதியான தன்மை மற்றும் பங்குடமையாளர் ஈடுபாடுகள் போன்ற துறைகளில் ஈடுபடுகின்ற நிறுவனம் தொடர்பில் சிறந்த நோக்கினைக் கொண்டவராக இருக்கின்ற வேளையில் மதுபானம், சூதாட்டம், ஆயுத் தயாரிப்பு, புகையிலை மற்றும் விபச்சார விடயங்கள் போன்ற பாவங்களைச் சேர்க்கும் துறைகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

### 2. நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளின் தோற்றம்

200 ஆண்டுகளுக்கும் மேலாக நிலைபெற்றுவரும் “வழிமுறையாளர்” பண முகாமைத்துவ நடைமுறைகள் சூதாட்டம், மதுபானம் மற்றும் புகையில் போன்றவற்றில் வியாபாரம் செய்பவர்களுடன் முதலீடுகளை மேற்கொள்வதனைத் தவிர்த்து வந்திருப்பதுடன் அத்தகைய இணைத்தரப்பினரிடமிருந்தான முதலீடுகளையும் நுண்ணாய்ந்திருக்கின்றனர் (டொனோவன் 2018) 1960கள் மற்றும் 1970 களைக் கொண்ட மாற்றத்திற்குரிய காலப்பகுதியில் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகள் வியட்னாம் போருக்கெதிரான, போருக்கெதிரான இயங்கங்களின் தோற்றம், இளைஞர்களுக்கிடையேயான சமத்துவ எழுச்சி, பெண்கள் உரிமை, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் போன்றவற்றின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தன. சமூக பொறுப்பு மிக்க முதலீட்டாளர்கள் அவர்களது பெறுமானங்களுடன் முரண்பட்ட கம்பனிகளில் முதலீடு செய்வதனை நிராகரித்தனர். எடுத்துக்காட்டாக வியட்னாம் போர்க்காலத்தில் வட அமெரிக்காவிலுள்ள குறிப்பிட்ட முதலீட்டாளர்கள் தமது சொத்துப்பட்டியலில் “போர் இலாபங்களை” தவிர்த்துக் கொள்ளும் விதத்தில் தமது வழிமுறைகளை மாற்றியமைத்துக் கொண்டனர்.


காலநிலை மாற்றங்கள், ஆட்கடத்தல் தொடர்பான விடயங்களில் உலகம் அதன் கவனத்தினைச் செலுத்தத் தொடங்கியதன் காரணமாக சமூகப் பொறுப்பினைக் கொண்ட முதலீட்டாளர்கள் தமது பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடுகளை வலுவாகப் பின்பற்றத் தொடங்கியதுடன் 1970 களின் தொடக்கத்தில் நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்ட பெறுமானங்கள் சிவில் உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் கரிசனைகள் என்பனவற்றின் அடிப்படையில் முதலாவது சமவாய நிதிகளின் தோற்றம் ஆயுத தயாரிப்பு, சூதாட்டம், மதுபானம், புகையிலை போன்ற வழிமுறைகளுக்கெதிரான அடிப்படைக் கரிசனைக்குரியவற்றையும் அதேபோன்று அணுசக்தி, சுற்றுச்கூழல் மாசமடைதல் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு போன்ற நவீன பிரச்சனைகளையும் கவனத்தில் கொண்டு சமூகப் பொறுப்பாண்மை மிக்க முதலீட்டாளர்களுக்கு நிதி வழங்குவதில் கவனம் செலுத்தியது. நுண்ணாய்வு செய்யப்படாத அவர்களின் இணைத்தரப்பினர்களுக்கெதிராக நுண்ணாய்வுச் செய்யப்பட்ட முதலீட்டாளர்களின் செயலாற்றத்தினை அளவிடுவதற்காக அடிப்படை அளவீட்டுக் குறியீட்டுடன் முதலீட்டாளர்களுக்கு நிதியினை வழங்கும் குறிக்கோளுடன் சமவாய நிதியங்களினால் சமூக பொறுப்பாண்மை மிக்க முதலீடுகளில் வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் 1990களில் டொமினி சமூகச் சுட்டெண்ணொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

### 3. இன்றைய நாட்களில் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளை மேற்கொள்ளுதல்

சமூகத்தின் நலனோம்புகை, எதிர்காலச் சந்ததியினர்களுக்கான பாதுகாப்புத்தன்மை என்பனவற்றுடன் கூடிய விதததில் நிறுவனங்கள் அவற்றின் நீடித்துநிலைத்திருக்கும் தொழிற்பாடுகள் தொடர்பான அவற்றின் விழிப்புணர்வு அதிகரித்து வருகின்றதொரு பின்னணியில், தற்போதைய வியாபாரச் சூழலில் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகள் அதிகளவிற்கு பிரபல்யமானதாக மாறிவருகிறது. தற்போதைய முதலீட்டுச் சூழலில், சொத்துடமையாளர்களினால் சூழல், சமூக, ஆளுகை மீதான கவனத்துடன் பொறுப்புமிக்க விதத்தில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றவிடத்து வருவாய்கள் சமூகப் பொறுப்பாண்மைமிக்கதொரு விதத்தில் பெறப்படுவதனை அடையாளம் கண்டுகொள்வது மிகத் தவிர்க்க முடியாததொரு விடயமாகும். நீடித்துவிலைத்திருக்கும் முதலீட்டிற்காக மோர்கன் ஸ்டான்லி இன்வெஸ்ட்மன்ற் மனேஜ்மன்ற் இன்ஸ்டியூட் மற்றும் மோர்கன் ஸ்டான்லி இன்ஸ்டியூட் சார்பில் சூழல் சமூகம் மற்றும் ஆளுகை முதலீட்டின் மீது கிறீன் வோர்ல்ட் அன்ட் அசோசியேட்டினால் நடத்தப்பட்ட அளவீடுகள் வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய பசுபிக் ஆகிய உலகின் மூன்று உலகளாவிய பிராந்தியங்களிலுமுள்ள சொத்து முகாமையாளர்களிடமிருந்தும் திரட்டப்பட்ட தகவல்களும் இவற்றின் பெறுபேறுகளும் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகள் மீதான சமூகப் பொறுப்பாண்மை முதலீட்டாளர்கள் வைத்திருக்கும் முக்கியத்துவத்திற்குப் போதுமான சான்றுகளை வழங்கின.

அளவீட்டில் கண்டறியப்பட்ட முக்கியமான விடயங்கள் பங்கேற்ற நிறுவனங்களில் 84 சதவீதமானவை முதலீட்டுச் செய்முறைக்குள்ளே நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டு பிரமாணங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமையினை அல்லது அவ்வாறு செய்வதற்கு தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதனை எடுத்துக்காட்டியிருப்பதுடன் அந்நிறுவனங்களிடையே 60 சதவீதமானவை கடந்த நான்கு ஆண்டுகளில் அதற்கான செய்முறைகளையும் ஆரம்பித்திருக்கின்றன. பெறுபேறுகள் பதிலிறுப்பாளர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் இடர்நேர்வு முகாமைத்துவம், வருமான அதிகரிப்பு மற்றும் அவற்றின் முதலீடுகளூடாக உலகளாவிய நீடித்துநிலைத்திருக்கும் தன்மையில் காணப்படும் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்திற்கான இணைந்த

நிறுவனத்தில் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளை மேற்கொள்வதைத் தூண்டுபவைகள்




வினா 10: உங்கள் நிறுவனத்தில் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளைப் பின்பற்றத் தூண்டும் பின்வரும் ஒவ்வொரு காரணிகளினதும் முக்கியத்துவம் எவ்வாறு அமைகிறது?


(மோர்கன் ஸ்ரான்லி இன்வெஸ்ட்மென்ற் இன்சிற்றியூற், 2018)

பணி என்பனவற்றை எடுத்துக்காட்டின.

உலகளாவிய சொத்துடமையாளர்களுக்கான ஒட்டுமொத்த முதலீட்டுச் செய்முறையானது, முன்மொழிவிற்கான கோரிக்கைச் செய்முறைகள், முதலீட்டுக் கொள்கைக் கூற்றுக்கள் உள்ளிட்ட நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டுப் பிரமாணத்தின் அதிகரித்த செல்வாக்கிற்குட்பட்டு வருகின்றனர்.

சூழல், சமூக மற்றும் ஆளுகை, ஒருங்கிணைப்புக்கள், கட்டுப்பாட்டு நுண்ணாய்வுகள் மற்றும் பங்குடமையாளர் ஈடுபாடுகள் என்பன நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டிற்கான பொதுவான அணுகுமுறைகளாகக் காணப்படுகின்றன. மேலும், நீடித்துநிலைத்திருக்கக்கூடிய முதலீட்டினைப் பரிசீலனையில் கொள்கின்ற நிறுவனங்களில் 78 சதவீதமானவை அவற்றின் முதலீட்டு உபாயத்தின் ஒரு பகுதியாக ஐக்கிய நாடுகளின்

நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளுடன் தொடர்பான நிறுவன ரீதியான நடவடிக்கைகள்




வினா 7: உங்கள் நிறுவனம் எந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது அல்லது நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளுடன் தொடர்பானவையென கருதப்பட்டவை (முதல் பதிலிறுப்புக்கள்)?

(மோர்கன் ஸ்ரான்லி இன்வெஸ்ட்மென்ற் இன்சிற்றியூற், 2018)

நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி உபாயத்தினை இணைப்பதனைப் பரிசீலனையில் கொண்டுள்ளன.

### 4. நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டினை மேற்கொள்வதற்கான அணுகுமுறைகள்

நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளை சூழல், சமூகம் மற்றும் ஆளுகையினை கூட்டிணைத்தல் மட்டுப்படுத்தப்பட்ட நுண்ணாய்வுகள், ஆயுதப்பொருள், பங்குடமையாளர் ஈடுபாடு அத்துடன்/ அல்லது தாக்க முதலீடு என்பவற்றின் வடிவில் பின்பற்றப்பட முடியும்.

#### 4.1 சூழல், சமூக, ஆளுகையினைக் கூட்டிணைத்தல்

இவ்வணுகுமுறையின் கீழ் முதலீடுகளைப் பகுப்பாய்வு செய்யும் போதும் சொத்து வகுப்புக்கள் முழுவதிலும் சொத்துப்பட்டியலைக் கட்டியெழுப்பும் போதும் சூழல், சமூக, ஆளுகைப் பிரமாணங்கள் பிரயோகிக்கப்படுகின்றன (நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மற்றும் பொறுப்பாண்மை முதலீடுகளுக்கான அரங்கம், 2017).


சொத்து முகாமையாளர்கள் தமது முதலீடுகளுக்குள் சூழல், சமூக, ஆளுகை பிரமாணத்தினைக் கூட்டிணைக்கையில் ஒன்றில் வலுவான சூழல், சமூக, ஆளுகைக் கொள்கைகளுடனும் அவர்களது சொத்துப்பட்டியலில் வலுவான நடைமுறைகளுடன் கூடிய கம்பனிகளை உள்ளடக்குதல் வேண்டும் அல்லது பலயீனமான சூழல், சமூக, ஆளுகைகளுடன் கூடிய கண்காணிப்புப் பதிவேடுகளைக் கொண்ட கம்பனிகளை நீக்கிவிட வேண்டும். இதன்படி சூழல், சமூக, ஆளுகை கூட்டிணைத்தல் உபாயங்கள் பின்வருமாறு இருக்கும்:

- நேர்க்கணியமான/ மிகச் சிறந்த வகை நுண்ணாய்வு: முதலீடுகள், நேர்க்கணியமான சூழல், சமூக, ஆளுகைச் செயலாற்றுத்துடன் கூடிய கம்பனிகளுக்கு அல்லது செயற்றிட்டங்களக்கு நெறிப்படுத்தப்படும்.
- எதிர்க்கணியமான நீக்கிவிடுகின்ற நுண்ணாய்வு: சூழல், சமூக, ஆளுகைப் பிரமாணத்தின் கீழ்வராத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கம்பனிகளில் முதலீடுகளை மேற்கொள்வதிலிருந்தும் விலகியிருத்தல்.
- சூழல் சமூக ஆளுகையின் ஒருங்கிணைப்பு: கம்பனிகளினதும் முதலீடுகளினதும் நிதியியல் பகுப்பாய்வில் சூழல், சமூக ஆளுகைப் பிரமாணத்தில் மிகத் தெளிவாக உள்ளடக்குதல்.
- தாக்க முதலீடுகளை மேற்கொள்ளுதல்: முதலீடுகள் சமூக மற்றும் சூழல் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்துகின்ற விதத்தில் செயற்றிட்டங்களில் நெறிப்படுத்தப்படுகின்றன.
- நீடித்துநிலைத்திருக்கக்கூடிய ஏற்கனவே திட்டமிடப்பட்ட முதலீடுகள்: நீடித்துநிலைத்திருக்கும் மேம்பாடுகளை எய்தும் நோக்குடன் செயற்றிட்டங்களை இலக்காகக் கொண்ட முதலீடுகள்.

#### 4.2 மட்டுப்படுத்தப்பட்ட நுண்ணாய்வுகள்

நிறுவனங்களை நீடித்துநிலைத்திருக்கும் வியாபாரங்களுடன் தொடர்புபடாத கைத்தொழில்களிலிருந்தான அவற்றின் முதலீடுகள் தவிர்க்கப்படுகின்றன அல்லது மட்டுப்படுத்தப்படுகின்றன.

தொழிலிலுள்ளவர்களைப் பிரத்தியேகமான முறையில் நுண்ணாய்வு செய்தல் (n=63)




வினா 12அ: பிரத்தியேகமாக/ எதிர்மறையாக/ பெறுமானத்தினை அடிப்படையாகக் கொண்ட தொழிலிலுள்ளவர்களை நுண்ணாய்வு செய்யும் பொழுது, பின்வரும் நுண்ணாய்வுகளில் உங்கள் நிறுவனம் எதற்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும்? (முதல் பதிலிறுப்புக்கள்)

* குறிப்பு: பரந்த அடிப்படையிலான படிவு எரிபொருளுக்கான நுண்ணாய்விற்கு விண்ணப்பிப்பதற்கு விரும்பிய பதிலிறுப்பாளர்கள் 21% மட்டுமே

(மோர்கன் ஸ்ரான்லி இன்வெஸ்ட்மென்ற் இன்சிற்றியூற், 2018)

2018 மோர்கன் ஸ்டான்லி இன்வெஸ்ட்மன்ற் மனேஜ்மன்ற் இன்ஸ்டியூட்டினால் நடத்தப்பட்ட ஆய்வானது ஆயுதங்கள், புகையிலை, விபசாரத்தொழில், சூதாட்டம் போன்றவற்றில் முதலீடுகளைச் செய்வதனை வழமையாகக் கொண்டிருக்கும் நிறுவனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட நுண்ணாய்விற்குரிய நிலையில் காணப்படுவதனை எடுத்துக்காட்டின.

### 4.3 நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளை மேற்கொள்வதற்காக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட அணுகுமுறை

ஏற்கனவே, தீர்மானிக்கப்பட்ட நிதியத்தின் முக்கிய கவனம் யாதெனில், நீர் அல்லது வலு போன்ற துறைகளின் மீது அல்லது நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி மற்றும் குறைந்த கார்பன் பொருளாதாரத்திற்கு மாறிச்செல்கின்ற தேவையுடன் தொடர்பான பிரச்சனைகளை மேற்கொள்வதுடன் தொடர்பானதாகக் காணப்பட்டவிடத்து, சூழல் சமூக ஆளுகைப் பிரமாணம் சொத்துப்பட்டியல் வடிவமைப்புச் செய்முறையில் முக்கிய பரிசீலனைக்குரியனவாகக் காணப்படுகின்றன (கிறாவ் மற்றும் சிலாகர் 2006). மோர்கன் ஸ்டான்லி இன்வெஸ்ட்மன்ற் மனேஜ்மன்ற் இன்ஸ்டியூட்டின் அளவீட்டின் பெறுபேறுகள் வளர்ச்சி மற்றும் பாலின் பல்லினத்தன்மை உட்பட காலநிலை மாற்றங்கள் முக்கிய பிரச்சனைகளாகக் காணப்படுவதனைக் காட்டுவதுடன் பங்கேற்கின்ற முதலீடுகள் அவற்றின் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளினூடாகக் கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றன.

### 4.4 ஆர்வலர்களின் ஈடுபாடு

தாக்கமுடைய கம்பனிகளின் மீது ஆர்வலர்களின் அதிகரித்து வருகின்ற ஈடுபாடுகள் கம்பனிகள் அவற்றின் ஆர்வலர்கள் அவர்கள் மேற்கொண்ட நீடித்துநிலைத்திருக்கும் முயற்சிகளில் ஈடுபாடு கொள்வதனை ஊக்குவித்திருக்கிறது. இச்செய்முறையில் சமூகத்திற்குப் பெறுமானத்தினை உருவாக்குவதற்கான ஆர்வலர்களை அடையாளம் காணுதல், ஆர்வலர்கள் குழுமத்தின் எதிர்பார்ப்புக்களைத் தீர்மானித்தல் மற்றும் ஆர்வலர்களுடனான ஈடுபாட்டுத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றை முக்கிய நடவடிக்கைகளாக அடையாளம் காணமுடியும். உதாரணமாக: கொக்காகோலா கெலனிக் போத்தலிடைக்கும் கம்பனியிலுள்ள ஆர்வலர்களின் வேறுபட்ட வடிவங்களை ஆர்வலர்களின் குழுமங்களை அடிப்படையாகக் கொண்டு வேறுபடுத்தியிருக்கிறது. இங்கு கம்பனி வழங்குநர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல், சமூகக் கூட்டங்களை ஒழுங்குசெய்தல், பல்கலைக்கழகங்களில், விரிவுரைகளை நடத்துதல், உள்ளூர் சமூகத்தினருடன் அநுசரணை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பன மூலம் நீடித்துநிலைத்திருப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டது (வாசிலிவா, 2014).

### 4.5 தாக்கம் மிக்க முதலீடு

தாக்கம் மிக்க முதலீடு நிதியியல் வருவாய்களுடன் சேர்த்துச் சாதகமான சமூக அல்லது சுற்றுச் சூழல் தாக்கத்தினை உருவாக்குவதன் மீது கவனத்தினைச் செலுத்துகிறது. மறுசொற்களில் கூறுவதாயின், இவ்வணுகுமுறையின் கீழ் சூழல் மற்றும் சமூக சவால்களை எதிர்கொள்வதற்கு வர்த்தக ரீதியான தீர்வுகள் கண்டறியப்பட்டன. தாக்கம்மிக்க முதலீட்டினை மேற்கொள்வதன் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட முக்கிய பிரமாணங்களாக, வருவாய்களுக்கு மேலதிகமாக சாதகமான சமூக அத்துடன்/ அல்லது சூழல் தாக்கங்கள், உருவான உண்மையான மாற்றம்/ மாற்றங்களுக்கான அடிப்படை அளவிற்கெதிரான அளவுமுறை மற்றும் முதலீடு செய்யப்பட்ட மூலதனம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளுடன் நேர்க்கணியமான முறையில் சம்பந்தப்பட்டிருக்கின்றதா போன்ற விடயங்களைச் சரிபார்த்துக் கொள்ளுதல் என்பன காணப்பட்டன (பிரீட்மான், மற்றையவர்கள், 2016).

## 5. நீடித்துநிலைத்திருக்கக்கூடிய முதலீடுகளை மேற்கொள்வதிலுள்ள அநுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள்

### 5.1 நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளை மேற்கொள்வதிலுள்ள அநுகூலங்கள்:

- தனிப்பட்ட பெறுமானங்கள்: முதலீட்டாளர்களின் நல்ல பெறுமானங்கள் சமூகப் பொறுப்பாண்மை மிக்க விதத்தில் அவர்களது முதலீடுகளிலிருந்து வருவாய்களை ஈட்டுவதற்கு அவர்களைத் தூண்டுவதன் வாயிலாக முதலீட்டாளர்கள் ஈட்டிய வருவாய் சிறந்த சமாதானம் நிரம்பிய தன்மைகளை அனுபவிக்கச் செய்கிறது (ஜே சவ்ரா சரசின், 2013).
- பொருளாதார வினைத்திறன்: சுற்றுச் சூழல் மற்றும் சமூகப் பொறுப்பாண்மையுடன் இணங்கிச் செல்லக்கூடிய உற்பத்திகளுக்கான கேள்வியை அதிகரிப்பதன் மூலம் சுற்றுச்சூழல் ரீதியில் சிநேகபூர்வமான முதலீடுகள் எதிர்காலத்தில் உயர்ந்த சாத்தியமான இலாபத்தினை முதலீட்டாளர்களுக்கு உருவாகிடும். நீலசெனின் புள்ளிவிபரங்கள் ஏறத்தாழ நான்கில் மூன்று பங்காளரான தொழிலதிபர்கள் நீடித்துநிலைத்திருக்கும் பொருட்கள் மற்றும் பணிகளுக்கு மேலதிகக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு விரும்பியிருக்கின்றமையினைக் கண்டறிந்திருக்கிறது (அபினிட்டி கப்பிட்டல், 2017).
- மாற்றத்திற்கான ஊக்கிகள்: சமூக பொறுப்பாண்மை மிக்க கம்பனிகள் மற்றும் செயற்றிட்டங்களுக்கான கேள்வி அதிகரித்து வருவதன் காரணமாக முதலீட்டாளர்கள்

அத்தகைய முயற்சிகளில் ஈடுபடத் தூண்டப்படுவர். இது அவர்களது வியாபாரத் தொழிற்பாடுகளில் மிகப்பெரும் உறுதிப்பாட்டுத்தன்மையினை அவர்கள் அடைவதற்கு முன்னோக்கிக் கொண்டுச் செல்வதுடன் இம்முயற்சிகளிலிருந்து பெறப்படுகின்ற நன்மைகள் சூழலுக்கும் மற்றைய முக்கியமான சமூகக் காரணிகளுக்கும் உதவும் (அபினிட்டி கப்பிட்டல், 2017).

- ஒப்பீட்டு ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட இடர்நேர்வுகளில் வருவாயுடன் கூடிய முதலீட்டினை உருவாக்குதல்: கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட இதன் பொருளாதார தொடர்புகளின் ஆய்வின் மூலம் ஆராய்ச்சியாளர்களினால் குறிப்பிடத்தக்கதொரு சாத்தியமான தாக்கம் அடையாளம் காணப்பட்டிருக்கிறது (ஜே சவ்ரா சரசின், 2013).

### 5.2 நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளை மேற்கொள்வதிலுள்ள பிரதிகூலங்கள்

- நேரம் மற்றும் ஆராய்ச்சி: நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளை மேற்கொள்வதென்பது எச்சரிக்கையுடன் கூடிய உபாயமொன்றாக இல்லாதிருப்பதனால், குறிப்பிட்ட அடிப்படை அளவுக்குறியீடுகளைப் பூர்த்திசெய்வதற்காக வைத்திருக்கும் சொத்துப்பட்டியலிலுள்ள அனைத்து முதலீடுகளையும் பொறுத்தவரை, மிகச் சிக்கலானதாக மாறியிருக்கும் முதலீட்டாளர்களின் பெறுமானத்துடன் அவை இணைந்துள்ளமையினை உறுதிப்படுத்துவதற்காக, சாத்தியமான முதலீடுகள் தொடர்பில் தொடர்ச்சியான ஆராய்ச்சிகளை மேற்கொள்வது மிக முக்கியமானதாகிறது (அபினிட்டி கப்பிட்டல், 2017).
- அடிக்கடி பயன்படுத்தப்படாத உத்தம உபாயமொன்று: ஒழுக்கவியலானது செயலாற்றத்திலும் பார்க்க மிக முக்கியமானதொன்றாக மாறியிருக்கக்கூடும் என்பதுடன், ஒழுக்கவியல் சார்ந்த அணுகுமுறையொன்றினைத் தொடங்குவதற்காக முதலீட்டாளர்கள் நிதியியல் வருவாய்களைத் தியாகம் செய்கின்ற நிலைமையினையும் தோற்றுவித்திருக்கிறது. இதன் விளைவாக, சில முதலீட்டாளர்கள் அவர்களது நிதியியல் வருவாயில் ஒரு பகுதியினை அறக்கொடைகளுக்கு நன்கொடையாக வழங்கச் செய்வதற்குப் பதிலாக பாரம்பரியமான முதலீட்டு அணுகுமுறைகளைத் தொடங்குவதற்கு முன்னுரிமையளிக்கச் செய்கிறது (அபினிட்டி கப்பிட்டல், 2017).
- உயர்ந்த கட்டணங்கள்: சமூக ரீதியான பொறுப்பாண்மை மற்றும் சிநேகபூர்வமான சுற்றுச்சூழல் தன்மை தொடர்பான பெறுமானங்கள் பேணப்படுகின்றமையினை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியின் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்க வேண்டிய தேவை காணப்படுவதன் காரணமாக சொத்துப்பட்டியல் முகாமையாளர்கள் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளுக்காக உயர்ந்த கட்டணங்களை விதிக்கின்றனர். இது, சொத்துப்பட்டியல் செயலாற்றத்தினைக் குறைத்து விடுகின்றது (கிளாஸ்மன் வேல்த் சேர்விசஸ், 2016).
- விடயம் சார்ந்த வரைவிலக்கணம்: சமூக ரீதியாக பொறுப்பு வாய்ந்த கம்பனியொன்றின் வரைவிலக்கணம் என்பது பல்வேறு அர்த்தங்களைத் தருகின்றதுடன் விடயம் சார்ந்ததுமொன்றாகும். இது முதலீட்டாளர்களைத் தவறாக வழிநடத்தக்கூடியது (கிளாஸ்மன் வேல்த் சேர்விசஸ், 2016).

## 6. சூழல் சமூக ஆளுகைத்தன்மையுடன் கூடிய இடர்நேர்வு மட்டுப்படுத்தப்பட்ட பல் சொத்து முதலீடுகளை மேற்கொள்ளுதல்

மட்டுப்படுத்தப்பட்ட இடர்நேர்வு கட்டமைப்பொன்றின் கீழ் சொத்துக்களை ஒதுக்கின்ற ஆரம்ப கட்டமானது, இலக்கினைக் கொண்ட தளம்பலுடன் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு சொத்துப்பட்டியலுடனுமான இடர்நேர்வினை அடையாளம் காண்பதுடன் ஆரம்பமாகிறது. நிலையான வருமானம், பங்கு மூலதனம் பண்டத்துடன் இணைக்கப்பட்ட முதலீடுகள், காசு மற்றும் ஏனைய சொத்து வகைகளை உள்ளடக்கிய பரந்தளவான சொத்துக் கலப்பு குறிப்பிட்ட இடர்நேர்வு இலக்கினை எய்துவதற்கேற்ற விதத்தில் அளவிடப்படுகின்றன. உயர்ந்துவரும் சந்தைகளில் பங்கேற்கும் பொருட்டும் தளம்பல்களிலிருந்து பாதுகாப்புக்களை எதிர்பார்த்தும் உலகளாவிய பொருளாதார நிகழ்வுகளுடன் இணைந்த சந்தைகளின் கீழ் நோக்கிய சரிவுகள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு இடர்நேர்வுகளை ஒதுக்குவதற்கான இயக்கவாற்றல் சார்ந்த அணுகுமுறையினை நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த சொத்து ஒதுக்கினூடாகத் தொடர முடியும். அத்தகைய இடர்நேர்வு மட்டுப்படுத்தப்பட்ட சொத்து ஒதுக்குச் செய்முறையின் நோக்கம் யாதெனில் பிரிவுகளிலுள்ள சொத்து வகுப்புக்களையும் தரம்சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ளுவதன் மூலம் ஆதரவளிக்கப்பட்ட கணியம்சார் முறையில் தூண்டப்பட்ட நடைமுறைப்படுத்தலுடன் கூடிய துணைச் சொத்து வகுப்புக்களையும் தந்திரோபாயமான முறையில் நிலைப்படுத்துவதனூடாகப் பெறுமதியினைக் கூட்டுவதேயாகும்.

1. இடர்நேர்வுத் தோற்றப்பாடு

பரந்தளவான சொத்துக் கலப்பொன்றினை இயக்கவியல் சார்ந்த முறையில் முகாமைப்படுத்தல், சொத்துப்பட்டியலின் தளம்பல் இலக்கினை எய்துவதற்கு எதிர்பார்த்தல்

2. தந்திரோபாய நிலைப்படுத்தல்

முக்கியமாக உருவாக்கப்பட்ட நிதியத்தினை பெறுதல், துணைத் துறையினைத் தீர்மானித்தல் மற்றும் பரந்தளவான சொத்து வகுப்புக்களுக்குள் பிராந்திய முன்னுரிகைள்

3. கணியம்சார் நிலையினை அளவுபடுத்தல்

தந்திரோபாய முன்னுரிமைகளைத் சுட்டப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட வருவாய்களுக்கு மாற்றுதல் தரம்சார் நிலைமைகளை அளவுக்குட்படுத்தல்

(மோர்கன் ஸ்ரான்லி இன்வெஸ்ட்மென்ற் இன்சிற்றியூற், 2018)

## 6.1 முதலீட்டுச் செய்முறைப் பொதுநோக்கு

முதலீட்டுப் பொறிமுறையானது, அச்செயன்முறையானது திரும்பத்திரும்ப மேற்கொள்ளப்படக்கூடியது, சிக்கனப்படுத்திக் கொள்ளக்கூடியது மற்றும் வினைத்திறனானது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் இடர்நேர்வுத் தோற்றப்பாடு, தந்திரோபாய ரீதியில் நிலைப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் கணியம்சார் நிலையினை அளவிடுதல் ஆகிய மூன்று நிலைகளை உள்ளடக்கியுள்ளது.

சொத்துக்களை ஒதுக்கிக் கொள்வதற்கான முதலாவது முன்னோக்கிய அணுகுமுறையென்பது இடர்நேர்வு இலக்கினைப் பூர்த்திசெய்கின்ற விதத்தில் எதிர்பார்க்கின்ற தளம்பல் மற்றும் இயக்கவாற்றல்மிக்க முகாமைப்படுத்துதல் பரந்த சொத்துக் கலப்பு என்பனவற்றின் மூலம் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினைத் தீர்மானித்துக் கொள்வதாகும். செய்முறையின் இரண்டாவது கட்டமான பரந்த சொத்து வகுப்புக்களுக்குள் தந்திரோபாய நிலைப்படுத்தலை மேற்கொள்ளும் போது பிராந்தியங்கள் மற்றும் துணைச் சொத்து வகுப்புக்களிடையே முன்னுரிமைகளைத் தீர்மானித்துக் கொள்வது முக்கியமானதாகும். முதலீட்டுச் செய்முறையின் இறுதிக்கட்டம் சொத்துப்பட்டியல் முகாமையாளர்களுடன் அளவினை நிலைப்படுத்துவது தொடர்பான தந்திரோபாய கருத்துக்களின் ஒழுக்கவியல்படுத்தப்பட்ட மாற்றங்களை மேற்கொள்ளல், தந்திரோபாய சொத்து வகுப்புப் பார்வையினைத் தீர்மானிப்பது மீது கவனம் செலுத்துவது மற்றும் தந்திரோபாய முன்னுரிமைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மிகையான வருமானத்தினைப் பெறுவதற்கும் நேடியான நன்மைகளைப் பெறுவதற்குமாகத் தரமான கணியம்சார் உத்திகளை முன்னுரிமைகளுக்கு மாற்றிக் கொள்வதுமாகும்.

1. இடர்நேர்வுத் தோற்றப்பாடு

பரந்தளவான சொத்துக் கலப்பொன்றினை இயக்கவியல் சார்ந்த முறையில் முகாமைப்படுத்தல், சொத்துப்பட்டியலின் தளம்பல் இலக்கினை எய்துவதற்கு எதிர்பார்த்தல்

2. தந்திரோபாய நிலைப்படுத்தல்

முக்கியமாக உருவாக்கப்பட்ட நிதியத்தினை அடைதல், துதை துறையினைத் தீர்மானித்தல் மற்றும் பரந்தளவான சொத்து வகுப்புக்களுக்குள் பிராந்திய முன்னுரிகைள்

3. கணியம்சார் நிலையினை அளவுபடுத்தல்

தந்திரோபாய முன்னுரிமைகளைத் தட்டப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட வருவாய்களுக்கு மாற்றுதல் தரம்சார் நிலைமைகளை அளவுபடுத்தல்

4. சூழல், சமூக ஆளுகை - அதிகரித்தளவில் நடைமுறைப்படுத்தல்

அதிகரித்த இடர்நேர்வு அளிப்புத் தோற்றப்பாட்டுச் சூழல் சமூக ஆளுகை "சிநேகபூர்வத்தினை நோக்கிய தன்மை" சூழல் சமூக ஆளுகை பிரச்சனை மீது பாதுகாப்பு மற்றும் குறிப்பிட்ட விடயங்களில் ஈடுபடும் கம்பனிகள்

(மோர்கன் ஸ்ரான்லி இன்வெஸ்ட்மென்ற் இன்சிற்றியூற், 2018)

### 6.2 சூழல், சமூக, ஆளுகை பிரமாணங்களைக் கூட்டிணைத்தல்

முதலீட்டுச் செய்முறைக்குப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட அடுத்த கட்டம் யாதெனில் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை அதிகரித்துக் கொள்ளும் விதத்தில் சூழல், சமூக மற்றும் ஆளுகைப் பிரமாணங்களைக் கூட்டிணைத்துக் கொண்டமையாகும். மோகன் ஸ்ரான்லியின்படி, இக்கட்டமானது நீடித்துநிலைத்திருக்கக்கூடிய தரவுகளை அடிப்படையாகக் கொண்ட இருப்பு - குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளைத் தணிப்பதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இதில், கம்பனிகள் அனைத்து நிலக்கரி இருப்புக்களையும் உள்ளடக்குகின்ற விதத்திலான அடிப்படையில் 0-5 அளவின் மீது '5'இல் தரமிடப்படுகின்ற கம்பனிகள் உச்சப்படுத்தப்பட்ட பாதுகாப்புக் கூடைகளை உறுதிப்படுத்துகின்ற சூழல், சமூக, ஆளுகை என்ற தலைப்புக்களைக் கொண்ட கூடைகளை உருவாக்குதல். "உயர் சாத்தியத்தன்மை" மீதான மேலதிக வலியுறுத்தல்களுடன் சூழல், சமூக, ஆளுகை - சிநேகபூர்வ இருப்புக்கள் எனப் பெயரிடப்பட்டதுடன், காலநிலை மாற்றம் போன்ற சூழல் சமூக ஆளுகைக் காரணிகள் மேலதிகச் செலவுகளை ஏற்படுத்தாமல், சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு, இலக்கிடப்பட்ட சூழல் சமூக ஆளுகைப் பிரச்சனைகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட கம்பனிகள் ஈடுபட்டு வருகின்றன.

## 7. இலங்கை மத்திய வங்கியின் நோக்கில், மட்டுப்படுத்தப்பட்ட இடர்நேர்வினைக் கொண்ட நீடித்துநிலைத்திருக்கும் அணுகுமுறையொன்றின் முக்கியத்துவம்

நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், மத்திய வங்கிகள் அரசாங்கம் மற்றும் தனியார் வங்கிகள் அதேபோன்று ஏனைய தனியார் துறை நிதியியல் நிறுவனங்கள் என்பன றில்லியன் டொலர் கொண்ட முதலீடு செய்யத்தக்க மூலதனத்தினை முகாமைப்படுத்துகின்றன. அத்தகைய அமைப்புக்கள் அவற்றின் நிதியினை வழிப்படுத்துகின்ற விதம் இக்கம்பனிகள், தொழில்நுட்பவியல்கள் மற்றும் செயற்றிட்டங்கள் மீது குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினைக் கொண்டிருந்து, நீடித்துநிலைத்திருக்கும் தீர்வுகளுக்குத் தொடர்ச்சியாக ஆதரவளிக்கின்றன (வேர்ள்ட் றிசோர்சஸ் இன்ஸ்டிடியூட், 2019).

சூழல், சமத்துவம் மற்றும் சமூக பொறுப்பாண்மை மீதான கரிசனைகளுடன் அண்மைக் காலத்தில் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகள் அதிகரித்தளவிற்கு பிரபல்யம் மிக்கவையாக மாறி வருவதுடன் அரசாங்கங்கள் அதேபோன்று வியாபார அமைப்புக்கள் போன்ற சட்டத்தினை வகுப்போரினால் கலந்தாராயப்பட்டு வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. உலகளாவிய ரீதியில், தற்பொழுது ஐ.அ.டொலர் 22.89 றில்லியன் அளவிலான சொத்துக்கள் பொறுப்பு வாய்ந்த முதலீட்டு உபாயங்களின் கீழ் தொழில்சார் நிபுணத்துவ முறையில் முகாமைப்படுத்தப்பட்டு வருவதுடன் 2014இலிருந்து 25 சதவீதம் கொண்ட அதிகரிப்பினையும் பிரதிபலிக்கிறது. ஒப்பீட்டு நியதிகளில், உலகளாவிய ரீதியில் அனைத்து தொழில்சார் முறையில் முகாமைப்படுத்தப்படும் சொத்துக்களில் பொறுப்பு வாய்ந்த முதலீடுகள் 26 சதவீதத்திற்கு வகைகூறுகின்றன. ஆகவே, நீடித்துநிலைத்திருக்கக்கூடிய முதலீடுகளை மேற்கொள்ளுதல் உலகளாவிய நிதியியல் சந்தைகளில் முக்கிய பங்கொன்றினை உள்ளடக்குகிறது (உலகளாவிய நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டு அணி, 2016).

ஐரோப்பாவில், நீடித்துநிலைத்திருக்கின்றதும் பொறுப்பாண்மை மிக்கதுமான முதலீட்டு உபாயத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்தச் சொத்துக்கள் 2014இலிருந்து 2016இற்கு 12 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 12.04 றில்லியனை அடைந்தன. ஐரோப்பாவில் தொழில்சார் ரீதியில் முகாமைப்படுத்தப்படும் மொத்தச் சொத்துக்களில் 53 சதவீதம் பொறுப்புமிக்க முதலீட்டு உபாயங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளுக்காகச் செய்யப்பட்ட மொத்தச் சொத்துக்கள் 2014இன் ஐ.அ.டொலர் 6.57 றில்லியனிலிருந்து 2016இன் தொடக்கத்தில் ஐ.அ.டொலர் 8.72 றில்லியனுக்கு 33 சதவீதத்தினால் உயர்வடைந்தன. அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் இணைந்து மேற்கொண்ட நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகள் 2014இலிருந்து 2016இல் ஐ.அ.டொலர் 515.7 பில்லியனாக விளங்கியதுடன் அவுஸ்திரேலியாவில் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகள் இப்பொழுது அனைத்து தொழில்சார் ரீதியில் முகாமைப்படுத்தப்படும் சொத்துக்களில் 50 சதவீதத்திற்கு வகைகூறுகின்றன. ஆசியாவில் நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டிற்கான ஒட்டுமொத்த சந்தை மெதுவாக வளர்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 52.1 பில்லியன் சொத்துக்களை அடைந்ததுடன் ஒன்று அல்லது கூடுதலான நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டு உபாயங்களில் பயன்படுத்தப்பட்டதுடன் யப்பான் ஆசியாவில் முதன்மை நாடாகவும் விளங்கியது (குளோபல் சஸ்ரெயினபிள் இன்வெஸ்ட்மன்ட் அலையன்ஸ், 2016).

மேலும், 2015இல் ஐக்கிய நாடுகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகள் மிகுந்த முக்கியத்துவத்தினைப் பெற்றதுடன், பொருளாதாரம், சமூகம் மற்றும் சூழல் சார்ந்த அபிவிருத்திகளை அடைந்து கொள்வதற்காக தனியார் துறை அவர்களின் வியாபாரத் தொழிற்பாடுகள் முதலீட்டுத் தீர்மானங்கள் மற்றும் மூலவள ஒதுக்குகளூடாக 2030 அளவில் 17 நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கு பங்களிப்பதன் மூலம் உலகம் தற்போது எதிர்நோக்குகின்ற மிக அவசரமான பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. பொறுப்புமிக்க முதலீட்டாளர்கள்

என்ற முறையில், மத்திய வங்கிகள் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகள், தொடர்பில் இன்றியமையாத வகிபாகத்தினைக் கொண்டிருப்பதுடன் இப்பிரபஞ்சததிற்கு சொந்தக்காரர்களாக விளங்கும் முதலீட்டாளர்களின் தவிர்க்க முடியாத பரிசீலனைக்குரிய உலகம் எதிர்நோக்கும் பேரண்ட இடர்நேர்வுகளையும் எடுத்துக்காட்டியது. நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகள் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுகின்ற வேளையில் இடர்நேர்வுக் கட்டமைப்பிலும் மூலதன ஒதுக்கு வழிகாட்டலிலும் வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது (பொறுப்பு வாய்ந்த முதலீடுகளுக்கான கோட்பாடுகள் 2017).

சூழல், சமூக, ஆளுகை சிநேகபூர்வச் சொத்துப்பட்டியல் குறிப்பிட்ட காலப்பகுதியில் காணப்படக்கூடிய இடர்நேர்வுகளுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடியனவாக இருப்பதனால் சூழல், சமூக ஆளுகையினால் வழிநடத்தப்படும் நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகள் இடர்நேர்வுகளுக்குச் சீராக்கப்பட்ட வருவாய்களுக்கு விட்டுக்கொடுக்காமல் சொத்து வகை முழுவதிலும் நடைமுறைப்படுத்த முடியும் (பிளாக்றொக் இன்வெஸ்ட்மன்ட் இன்ஸ்ரிரியூட், 2018). உலகம் முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட கல்வியியல் சார்ந்த ஆராய்ச்சிகளில் கணிசமான தொகை, நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகள் முதலீட்டுச் செயலாற்றத்தில் எதிர்மறையான உறவுமுறைகளைக் கொண்டிருப்பதில்லை என்பதனை எடுத்துக்காட்டின. மேலும், நீடித்துநிலைத்திருக்கும், முதலீடுகள், பாரம்பரிய நிதிகளுடன் கூடிய கம்பனிகளுக்கு இணையாகச் செயற்படுவதனையும் உயர்ந்த சூழல், சமூக, ஆளுகைகளுடன் கூடிய கம்பனிகளுடன் சுட்டெண்ணிடப்பட்டிருப்பதனையும் கணக்கீட்டிலும் அதேபோன்று இருப்புச் சந்தை நியதிகளிலும் அவர்களது இணைத்தரப்பினரை விஞ்சிய செயற்பாடுகளைக் கொண்டிருப்பதனையும் கண்டறிந்திருக்கிறது (ஹேஸ் 2016).

நாட்டின் மேலாண்மைச் சபை என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கி 2019 இறுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 7.6 பில்லியன் கொண்ட வெளிநாட்டு ஒதுக்கினைப் பேணியதுடன் மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவத்தின் முக்கிய குறிக்கோள்களாக திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்ட எச்சரிக்கையுடன் கூடிய முகாமைத்துவ உபாயத்தினை முக்கியமாகப் பின்பற்றியதன் மூலம் பாதுகாப்பும் திரவத்தன்மையும் உத்தரவாதப்படுத்தப்படுகிறது. எனினும், இலங்கை மத்திய வங்கி, நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான காலப்பகுதியில் உயர்ந்ததும் நீடித்துநிலைத்திருக்கக்கூடியதுமான இடர்நேர்விற்குச் சீராக்கப்பட்ட வருவாய்களை உருவாக்குகின்ற குறிக்கோள்களினால் தூண்டப்பட்ட திரவத்தன்மை தடைகளுக்காக ஒதுக்கங்களைச் செய்த பின்னர் மிகையான ஒதுக்கு மட்டங்களை முகாமைப்படுத்துவதில் தீவிரமான முகாமைத்துவ உபாயங்களைத் தொடர்ந்தது. நிலையான வருமானப் பிணையங்கள் பணச் சந்தைச் சாதனங்கள் மற்றும் தங்கம் என்பன வெளிநாட்டு ஒதுக்குகளை உள்ளடக்கியுள்ள முக்கிய சொத்துக்களாகக் காணப்படுவதுடன் இச்சொத்துக்கள் ஐ.அ.டொலர், அவுஸ்திரேலியன் டொலர், யப்பானிய யென், பிரித்தானிய பவுண், யூரோ, நியூசிலாந்து டொலர், சீன நாணயம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி அலகு ஆகிய நாணயங்களுக்கிடையே பகிரப்பட்டிருந்தன.

உலகின் எஞ்சிய நாடுகளுடனும் ஏனைய தோற்றம் பெற்றுவரும் நாடுகளுடனும் ஒப்பிடுகையில், இலங்கை நீடித்துநிலைத்திருக்கக்கூடிய முதலீடுகளைத் தொடர்வதன் முக்கியத்துவத்தினை உரிய முறையில் அங்கீரிப்பது இன்னமும் இடம்பெறாதபோதும், நீடித்துநிலைத்திருக்கக்கூடிய இலக்குகளை எய்துவதில் நாட்டின் பங்களிப்பு தொடர்பான பின்னணியில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வகிபாகமொன்று ஆற்றப்படுகிறது. இதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளை நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டினைக் குறிக்கும் இலங்கைக்கான மிக முக்கியமான படிக்கால்லாகப் பரிசீலனையில் கொள்ளமுடியும் என்பதுடன் இது எஞ்சிய இலங்கை முதலீட்டாளர்களுக்கான ஆதரவினையும் ஊக்குவிப்பினையும் காட்டுகிறது.

உலகின் முதலீட்டாளர் சமூகம் அதிகரித்து வருவதனால், திடமான இடர்நேர்விற்குச் சீராக்கப்பட்ட வருவாயுடன் கூடிய நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளின் முக்கியத்துவம் நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டு நடைமுறைகளின் வெற்றிக்கு ஆற்றல்வாய்ந்த சான்றுகளை வழங்குவதுடன் அனுபவ ரீதியான ஆய்வுகளில் கண்டறியப்பட்டவையும் இதே போக்கினை வலியுறுத்துவதனால் இலங்கை மத்திய வங்கி நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் இடர்நேர்விற்குச் சீராக்கப்பட்ட நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டு அணுகுமுறையினைப் பின்பற்றுவதிலிருந்தும் நன்மைகளைப் பெறமுடியும். இதன்படி, நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகளுக்கான வளர்ந்துவரும் உலகளாவிய கேள்வியின் பின்னணியில் இலங்கை மத்திய வங்கியும் இப்போக்கினைப் பின்பற்றி வருவதுடன் 2019இல் ஐக்கிய அமெரிக்க டொலரில் குறித்துரைக்கப்பட்ட பசுமை முறிகளிலும் முதலீடுகளை மேற்கொண்டது.

எனினும், இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்களுக்கிணங்க நிலையான வருமான பிணையங்கள், பணச் சந்தை மற்றும் தங்கம் என்பனவற்றில் மட்டுமே முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டதுடன் பங்குரிமை மூலதனங்களில் முதலீடு செய்வதற்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை. மேலும், உயர்ந்த சொத்து உள்ளமைப்பினைக் கொண்டிருக்கும்நிலையான

வருமான பிணைய உடமைகள், இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையில் குறிப்பிடப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட நாடு கடந்த நிதியம் மற்றும் முகவர் நிறுவனங்களில் அதன் நிலையான வருமான பிணைய முதலீட்டில் மூன்றிலொரு பங்கினை மாத்திரமே வைத்திருக்கலாம் என்ற இயலளவின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆகவே, அத்தகைய நீடித்துநிலைத்திருக்கும் முதலீடுகள் நாடு கடந்த அல்லது முகவர் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட முறிகளை அல்லது கம்பனிகளினால் வழங்கப்பட்ட பங்குகளைக் குறிக்குமாயின் இலங்கை மத்திய வங்கி தற்போதைய சூழ்நிலையில் இடர்நேர்விற்குச் சீராக்கப்பட்ட நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டு அணுகுமுறைக்குள் காத்திரமான விதத்தில் ஊடுகடத்தப்படுவதில் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கிறது. இருப்பினும் கூட, அனுபவ ரீதியான சான்றுகளினால் காட்டப்பட்டவாறு, இடர்நேர்வு சீராக்கப்பட்ட நீடித்துநிலைத்திருக்கும் முதலீட்டு அணுகுமுறையினைப் பின்பற்றுவது உலக சந்தைகளில் முக்கியமானதொரு போக்காகக் காணப்படுவதுடன் நீண்ட காலத்தில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வருவாய்களை உருவாக்கக்கூடிய உள்ளார்ந்த வளத்தையும் கொண்டிருப்பதனால் இவ்வழியில் இலங்கை மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவது மீது கவனத்துடன் கூடிய முயற்சிகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


Affinity Capital, 2017. What are the benefits and drawbacks of ethical investing?. [Online]
Available at: http://emmalouisedavidson.com/affinitycapital/latest-investment-financial-strategy-news/the-greater-good/what-are-the-benefits-and-drawbacks-of-ethical-investing
[Accessed 26 January 2019].

Anon., 2017. What are the benefits and drawbacks of ethical investing?. [Online]
Available at: http://emmalouisedavidson.com/affinitycapital/latest-investment-financial-strategy-news/the-greater-good/what-are-the-benefits-and-drawbacks-of-ethical-investing
[Accessed 20 12 2018].

Anon., 2018. Socially responsible investing. [Online]
Available at: https://en.wikipedia.org/wiki/Socially_responsible_investing

Blackrock Investment Institute, 2018. Sustainable investing: a 'why not' moment, s.l.: s.n.

Capelle-Balncard, G. & Monjon, S., 2012. Trends in the literature on socially responsible investment: looking for the keys under the lamppost. Business Ethics: A European Review, 21(3), pp. 239-250.

Corporate Social Responsibility Initiative, Harvard Kennedy School, 2018. Money, Millennials and Human Rights - Sustaining "Sustainable Investing", s.l.: s.n.

Donovan, W., 2018. A Short History of Socially Responsible Investing. [Online]
Available at: https://www.thebalance.com/a-short-history-of-socially-responsible-investing-3025578
[Accessed 10 12 2018].

FNG, 2017. Sustainable Investments. [Online]
Available at: https://www.forum-ng.org/en/sustainableinvestments/sustainable-investments.html
[Accessed 22 12 2018].

Fontinelle, A., n.d. Ethical Investing: Benefits And Drawbacks Of Ethical Investing. [Online]
Available at: https://www.investopedia.com/university/ethical-investing/ethical-investing10.asp
[Accessed 28 12 2018].

Freedman, S., Vartikar, J., Wiebeck, A. & Zoltani, T., 2016. Doing well by doing good - Impact Investing, s.l.: UBS.

Friede, G., Busch, T. & Bassen, A., 2015. ESG and Financial Performance: Aggregated Evidence from More than 2000 Empirical Studies. Journal of Sustainable Finance & Investment, 5(4), pp. 210-233.

Glassman Wealth Services, 2016. The Pros and Cons of Socially Responsible Investing (SRI). [Online]
Available at: https://www.glassmanwealth.com/blog/pros-cons-socially-responsible-investing-sri/
[Accessed 20 12 2018].

Global Sustainable Investment Alliance, 2016. Global Sustainable Investment Review, s.l.: s.n.

Graaf, F. J. d. & Slager, A., 2006. Guidelines for Integrating Socially Responsible Investment in the Investment Process.

Hale, J., 2016. Sustainable Investing Research Suggests No Penalty, s.l.: Morningstar Manager Research.

J. Safra Sarasin, 2013. Advantages of sustainable investment. [Online]
Available at: https://www.jsafrasarasin.ch/internet/ch/en/ch_index/ch_sustainability/ch_sustainable_investment/ch_advantages_sustainable_investment.html
[Accessed 26 January 2019].

Kell, G., 2018. The Remarkable Rise Of ESG. [Online]
Available at: https://www.forbes.com/sites/georgkell/2018/07/11/the-remarkable-rise-of-esg/#74478db21695
[Accessed 22 12 2018].

Khan, M., Serafeim, G. & Yoon, A., 2015. Corporate Sustainability: First Evidence on Materiality. The Accounting Review, 91(6), pp. 1697-1724.

Merz, T., 2016. Sustainable investing is becoming much more important. [Online]
Available at: https://www.ipe.com/reports/special-reports/etfs-guide/sustainable-investing-is-becoming-much-more-important/10013232.article
[Accessed 25 12 2018].

Morgan Stanley Investment Management Institute, 2018. MSIM Sustainable Investing Survey Global Results. s.l., s.n.

Principles for Responsible Investment, 2017. THE SDG INVESTMENT CASE, s.l.: s.n.

Sharma, R., 2018. DWS encourages central banks to be active in sustainable investing. [Online]
Available at: https://www.investmenteurope.net/investmenteurope/news/3724402/dws-encourages-central-banks-active-sustainable-investing
[Accessed 18 12 2018].

The Forum for Sustainable and Responsible Investment, 2017. ESG Incorporation. [Online]
Available at: https://www.ussif.org/esg
[Accessed 17 January 2019].

Townsend, B., 2017. From SRI to ESG: The Origins of Socially Responsible and Sustainable Investing, California: Bailard Wealth Management.

Vasileva, M., 2014. Stakeholder Engagement in Sustainability: why does it matter? Good practices from Coca-Cola Hellenic.. [Online]
Available at: http://www.duurzame-innovatie.net/blog/blog/stakeholder-engagement-sustainability-mattergood-practices-coca-cola-hellenic/
[Accessed 26 January 2019].

World Resources Institute, 2019. Greening Private Finance. [Online]
Available at: https://www.wri.org/our-work/project/greening-private-finance/sustainable-investing-initiative
[Accessed 29 January 2019].

# பொதுக் கொள்வனவில் பணத்திற்கான பெறுமதியினை மேம்படுத்துவதற்காக ஒப்பந்த முகாமைத்துவத்தினை வலுப்படுத்தல்

அசாடி எதிரிசிங்க
மூத்த உதவிச் செயலாளர்
செயலகத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## 1. அறிமுகம்

"விலைக்கோரல் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளைத் தயாரிப்பதற்காக செலவிடப்பட்ட காலத்தின் அளவு, ஒப்பந்த நிருவாகத்திலும் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டதன் பின்னர் காணப்படக்கூடிய பிணக்குகளையும் கையாள்வதற்குத் தேவையான மூலவளங்களுக்குமிடையே தலைகீழான தொடர்பொன்று அடிக்கடி காணப்படுகிறது."[1]

"பொதுமக்களின் நலவுரித்துக்களைப்" பாதுகாக்கும் நோக்குடன் அரச துறை பெறுமதிசார்ந்த சூழலொன்றில் தொழிற்படுகிறது. அரச நிறுவனங்கள் தனியார் துறை அல்லது பொதுத் துறை நிறுவனங்களுடன் வேலைகள், பொருட்கள் அல்லது பணிகளின் கொள்வனவில் ஈடுபடுகின்ற நேரங்களில் பொதுமக்களின் நலவுரித்துக்களை உச்சப்படுத்துகின்றன. எழுதப்பட்ட ஆவணமொன்று தொடர்பில் அதாவது ஒப்பந்தத்தின் செய்முறையில் அதன் குறிக்கோள்களைப் பெற்றுக்கொள்வதில் இருதரப்பினருக்குமிடையேயான நம்பகத்தன்மை ஒப்பந்தத்தின் கட்டமைப்பாக இருப்பதனால், கொள்வனவுச் செய்முறையில் ஒப்பந்தங்களைத் தயாரிப்பது இன்றியமையாத பகுதியாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக, பொதுமக்கள் நலவுரித்துக் குறிக்கோள்களைப் பெற்றுக்கொள்வதுடன் பொது மூலவளங்கள் தொடர்புபட்டுள்ளமையினை உறுதிப்படுத்துவது ஒப்பந்த முகாமைத்துவத்திற்கு முக்கியமானதாக மாறியிருக்கிறது. ஒப்பந்த முகாமைத்துவத்தினை வடிவமைப்பதில் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகள் காணப்படுகின்றன. அத்தகைய கோட்பாடுகளினால் வழிகாட்டப்பட்டவை ஒவ்வொரு ஒப்பந்தங்களையும் சாத்தியமான ஒப்பந்த முகாமைத்துவமொன்றினூடாக முகாமைப்படுத்த முடியும்.

## 2. சுருக்கமான முறையில் பொதுக் கொள்வனவு

பொதுக் கொள்வனவானது அரச நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செயற்றிட்டங்களுக்கான சொத்துக்கள் அல்லது சேவைகள் அல்லது பணிகளைக் கொள்வனவு செய்வதற்கான அரச பணத்தின் செலவிடலின் முழு செய்முறையுடனும் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. இது அரச நிறுவனமொன்று தேவையொன்றினை அல்லது தேவைப்பாடொன்றினை அடையாளம் கண்டு அத்தேவைப்பாடுகளைக் கொள்வனவு செய்யத் தீர்மானிப்பதுடன் ஆரம்பமாகின்றது. கொள்வனவானது இடர்நேர்வுகளை மதிப்பிடல், மாற்றுத் தீர்வுகளை எதிர்பார்த்தல் மற்றும் மதிப்பிடல், விசாரணைகளின் நியதிகள், ஒப்பந்தங்களை வழங்குதல், சொத்து அல்லது சேவைகளுக்கான கொடுப்பனவுகளைச் செய்தல், தொடர்பானவிடத்து ஒப்பந்தமொன்றின் தொடர்ந்தியங்கும் முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்தம் தொடர்பான கருத்துக்களைப் பரிசீலனையில் கொள்ளுதல் ஆகிய செய்முறைகளினூடாகத் தொடர்கிறது. கொள்வனவும் கூட, சொத்தின் ஆயுள்காலம் முடிவடைந்து அது அகற்றப்படும் வரை நீடிக்கிறது.[2] இலங்கையில், அரச நிறுவனங்களின் கொள்வனவிற்குப் பிரயோகிக்கத்தக்க

---

1 அவுஸ்திரேலிய அரசாங்க சொலிசிட்டர், *போட்டித்தன்மை வாய்ந்த விலைக்கோரல் மற்றும் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் - உபாய ரீதியான மற்றும் சட்டப் பிரச்சனைகள், சட்டச் சுருக்கம்* இல.35 (1997), பக்கம் 10

2 பொதுநலவாய கொள்வனவு வழிகாட்டல்கள் (2020), பக்கம் 10.

முக்கியமான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை உள்ளடக்கிய அரசியல் யாப்பின் ஏற்பாடுகள் (1978) மற்றும் பொதுக் கொள்வனவு வழிகாட்டல்கள் என்பனவற்றிற்கிணங்க பொதுக் கொள்வனவுகள், அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகளின் கொள்வனவு, வாடகை, குத்தகை அல்லது தவணைக் கொள்வனவு என்பனவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது.[3] இவை பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது பணிகளை நிறைவேற்றுதல் ஆகிய ஏற்பாடுகளுடன் தொடர்பான சேவைகளை உள்ளடக்கும்.

அரச நிதியியல் முகாமைத்துவச் செய்முறைக்குள், முக்கியமாகப் பின்வரும் காரணங்களுக்காக, கொள்வனவு மிக முக்கியமானதொன்றாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

(i) பொதுக் கொள்வனவுகள் பொது நிதியுடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றதுடன் அத்தகைய நிதிகள் உரிய நேரத்தில் மாற்றல் செய்யப்பட்டமையினையும் சிக்கனமான முறையிலும் காத்திரமான சேவைகளினூடாகவும் மேற்கொள்ளப்பட்டமையினையும் உறுதிப்படுத்தும் விதத்தில் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கிடப்படல் வேண்டும். எளிமையான நியதியில் குறிப்பிடப்பட வேண்டுமெனில் பணத்திற்கான பெறுமதி[4] அனைத்து மட்டங்களிலும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ii) அரச செலவினத்தின் பொறுப்புக்கூறும் தன்மையினை அதிகரித்தல் மற்றும் சிறந்த ஆளுகைக்கு ஆதரவளித்தல், அரச நிறுவனங்கள் தொடர்பில் பொதுமக்களின் நம்பிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு அரச பொறுப்புக்கூறும் தன்மையும் வெளிப்படைத்தன்மையும் இன்றியமையாதனவாகும்.

(iii) பொதுக் கொள்வனவு பொருட்கள் மற்றும் சேவை பணிகள் எளிமையான கொள்வனவிலிருந்து, பொதுமக்களின் நிதி கணிசமானளவிற்குப் பயன்படுத்தப்படுகின்ற முக்கிய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் போன்ற பல்வேறு ஆர்வலர்களும் தொடர்புபடுகின்ற சிக்கலான அரச நடவடிக்கைகள் வரையில் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.

(iv) பிரசைகளுக்குத் தேவையான பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகள் சரியான நேரத்தில் விநியோகிக்கப்படுவதனை உறுதிப்படுத்தல் மற்றும் போட்டித்தன்மை, வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவித்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கு மேலதிகமாக, பொதுக் கொள்வனவுகளை ஆளுகை செய்கின்ற குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் கோட்பாடுகளுடன் பல நிறுவனங்கள் காணப்படுகின்றன. எனினும், அத்தகைய கட்டமைப்பின் பொதுவான கருத்து யாதெனில், பொதுக் கொள்வனவுச் செய்முறையினை மேற்கொள்ளுதல், அரச நிதி முகாமைத்துவத்தில் ஏன் முக்கியமானதாகக் காணப்படுகின்றது என்பது தொடர்பில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன.

## 3. கொள்வனவு செய்முறையொன்றில் ஒப்பந்த முகாமைத்துவம்

### *சுருக்கமான விதத்தில் அரச கொள்வனவுச் செய்முறை*


கீழேயுள்ள பாய்ச்சல் வரைபடத்தில் தரப்பட்டுள்ளவாறு உண்மையான கொள்வனவுச் செய்முறையொன்று திட்டமிடல், கோரிக்கையினை முன்னெடுத்தல் தேவைப்பாடுகளின் அபிவிருத்தி (தொழில்நுட்பம், நேரம் கணித்தல், தரம், தடைகள்) கோரிக்கைக்கு ஒப்புதலளித்தல், கொள்வனவு அதிகாரம், விலைக்குறிப்பீடு/ முன்மொழிவுகளின் மீளாய்வு ஒப்பந்தங்களை வழங்குதல், ஒப்பந்தங்களை முகாமைப்படுத்தல் என்பனவற்றைச் சுருக்கமாக உள்ளடக்குகிறது.

இச்செய்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் அரச நிறுவனங்கள் கொள்வனவு ஆவணங்களைத் தயாரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன இவ்வாவணங்கள் பொதுக் கொள்வனவின் அறிவித்தல்,

---

3 அரசியல் யாப்பின் 156 'எச்' உறுப்புரையின்படி, "அரச நிறுவனங்கள்" என்பது அமைச்சு, அரச திணைக்களமொன்று, அரச கூட்டுத்தாபனமொன்று, உள்ளூராட்சி மன்றம், ஏதேனும் வியாபாரம், அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட ஏதேனும் பொறுப்புக்கள் ஐம்பது சதவீதத்திற்கும் கூடுதலான பங்கினைக் கொண்டுள்ள கம்பனியொன்று/ அரசாங்கம் அரச கூட்டுத்தாபனமொன்று அல்லது உள்ளூராட்சிமன்றமொன்று 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படுவதற்கு எண்ணியுள்ள கம்பனியொன்று

4 "முதலீட்டுச் செயற்றிட்ட நிதியிடல் மற்றும் ஏனைய தொழிற்பாட்டுக் கொள்வனவ விடயங்கள் 2016" மீதான "உலக வங்கியின் கொள்கையின்படி, பணத்திற்கான பெறுமதி என்பது காத்திரமான தன்மை, வினைத்திறன மூலவளங்களின் பொருளாதாரப் பயன்பாடு எனப் பொருள்படுவதுடன் இது பொருத்தமானவாறான தொடர்பான செலவுகள் மற்றும் நன்மைகள்/ இடர்நேர்வுகளின் மதிப்பீடு மற்றும் விலையல்லாக் காரணங்கள் அத்துடன்/ அல்லது ஆயுள் சுழற்சிச் செலவுகள் என்பனவற்றைத் தேவைப்படுத்துகின்றன. விலை மாத்திரம் பணத்திற்கான தேவையான பெறுமதியினைக்காட்டாது."




மூலம்: ஐ.நாடுகள் கொள்வனவு தொழில்முனைவோர் கைநூல்

விசேட கொள்வனவு அறிவித்தல், விலைக் குறிப்பீட்டிற்கான கோரிக்கை, கொள்வனவு ஆவணங்கள் (பதிலிறுப்பு விலைக்குறிப்பீட்டினை/ முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கு வாய்ப்புக்களைக் கொண்டுள்ள விலைக் குறிப்பீட்டாளர்களுக்காகத் தேவையான தவகல்களை வழங்குதல்) நிகழ்ச்சிநிரல் (ஏதேனுமிருப்பின்) ஒப்பந்தப் படிவங்கள் (ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனைகளைத் தொடர்ந்து வரவேண்டிய ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகள் உட்பட ஏதேனுமிருப்பின்) ஆர்வத்தினை வெளிப்படுத்துங்கள், விலைக்கோரல்களுக்கான கோரிக்கை, முன்மொழிவிற்கான கோரிக்கை என்பனவற்றை உள்ளடக்கியிருந்ததுடன் இவை வன்பொருள் வடிவத்திலோ அல்லது இலத்திரனியல் வடிவத்திலோ காணப்பட்டன.

மதிப்பீட்டுச் செய்முறைகள் நிறைவடைந்து, வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்குறிப்பீடுகள்/ முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் ஒப்பந்தமானது வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளருக்கு வழங்கப்படும். இது தொடர்பில் வழமையான ஒப்பந்தம் தொடர்பான கொள்வனவினை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கும் வெற்றி பெற்ற விலைக் குறிப்பீட்டாளர்களுக்குமிடையில் மேற்கொள்ளப்படுகிறது.

**“பகிரங்க ஒப்பந்தம்” என்றால் என்ன?**

பகிரங்க ஒப்பந்தம் என்ற சொற்பதங்களுக்குப் பொதுவாக ஏற்புடைத்தான வரைவிலக்கணமொன்று இல்லாமையினால் சட்டவாக்கமொன்றில் தரப்பட்டுள்ள பொருள்கோடலைப் பார்ப்பது, அதாவது “பகிரங்க ஒப்பந்தம்” என்ற சொற்பதத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொருள்கோடலுக்கான 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கப் பகிரங்க ஒப்பந்தத்தின் 45ஆம் இலக்கப் பிரிவில் வழங்கப்பட்ட பொருள்கோடலைப் பார்ப்பது பயன்மிக்கதாகும். இதற்கமைய, பகிரங்க ஒப்பந்தம் என்பதன் பொருள் விலைக்கோரலாளர்களின் தூண்டுதல்களுக்குட்படக்கூடிய தீர்மானிக்கப்படக்கூடிய அல்லது தீர்மானிக்கப்பட்ட அல்லது அந்த பொது நிறுவனத்தின் சார்பிலான ஏதேனும் பணிகள் அல்லது சேவைகள் அல்லது வழங்கல் அல்லது ஏதேனும் பொருட்களின் மூலப்பொருட்கள் அல்லது ஏதேனும் பொது நிறுவனத்திற்கான சொத்துக்களின் விற்பனையின்[5] செயலாற்றத்திற்கான ஏதேனும் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களை விற்பனை செய்தல் அல்லது அகற்றிவிடுவதற்கான ஏதேனும் ஒப்பந்தத்தினையும் உள்ளடக்கும்.

ஒப்பந்தத்தினைச் செய்கின்ற தரப்பினர்களின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகை அதன் தன்மை அல்லது சிக்கலான தன்மைகள் வேறுபடக்கூடுமெனினும் பாரம்பரியமான பகிரங்க ஒப்பந்தமானது ஒப்பந்தங்களை மேற்கொள்கின்ற தரப்பினர்களின் (பொதுவான மற்றும் விசேட நிலைமைகள் உட்பட) ஒப்படைகளின் செயற்பரப்பு உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை உள்ளடக்கிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள், விலைத் திருத்தங்கள், செயலாற்றப் பாதுகாப்பினைக் கட்டுப்படுத்தக்கூடிய கொடுப்பனவு ஏற்பாடுகள் (ஏதுமிருப்பின்) ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகள், பிணக்குகளுக்கான தீர்மானப் பொறிமுறைகள் ஒப்பந்தங்களை முடிவுறுத்தல், ஒப்பந்தங்களை நிருவகிக்கின்ற கட்டணங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

---

5 “முதலீட்டுச் செயற்றிட்ட நிதியிடல் மற்றும் ஏனைய தொழிற்பாட்டுக் கொள்வனவு விடயங்கள் 2016” மீதான “உலக வங்கியின் கொள்கையின்படி, பணத்திற்கான பெறுமதி என்பது காத்திரமான தன்மை, வினைத்திறன் மூலவளங்களின் பொருளாதாரப் பயன்பாடு எனப் பொருள்படுவதுடன் இது பொருத்தமானவாறான தொடர்பான செலவுகள் மற்றும் நன்மைகள்/ இடர்நேர்வுகளின் மதிப்பீடு மற்றும் விலையல்லாக் காரணங்கள் அத்துடன்/ அல்லது ஆயுள் சுழற்சிச் செலவுகள் என்பனவற்றைத் தேவைப்படுத்துகின்றன. விலை மாத்திரம் பணத்திற்கான தேவையான பெறுமதியினைக்காட்டாது.”

### ஒப்பந்த முகாமைத்துவம் என்றால் என்ன?

ஒப்பந்த முகாமைத்துவம் என்பது ஒப்பந்தம் செய்யப்பட்ட வெளியீடுகளை அத்துடன்/ அல்லது பெறுபேறுகளை வினைத்திறனுடனும் காத்திரமான விதத்திலும் வழங்குவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதனைத் தீவரமாக முகாமைப்படுத்துவதாகும்.[6]

ஒப்பந்த முகாமைத்துவ நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, அரச நிறுவனம் மற்றைய விடயங்களுடன் பொருத்தமான ஒப்பந்த வகை மற்றும் ஒப்பந்த நியதிகள் என்பனவற்றைத் தீர்மானித்தல், அதன் தன்மை, இடர்நேர்வு மற்றும் நடவடிக்கைகளின் சிக்கலான தன்மை, நோக்கம் பரிசீலனைகளுக்கான பொருத்தம், இடர்நேர்வுகளையும் பொறுப்புக்களையும் உத்தம அளவில் பகிர்தல், ஒப்பந்த தரப்பினர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றைத் தீர்மானிப்பதில் தலையாய பங்கினை வகிக்கிறது.

கீழேயுள்ள வரைபடம் ஒப்பந்தத்தின் கட்டங்களைத் தெளிவுபடுத்துகிறது. இது ஒப்பந்தத்தின் உருவாக்கம் திட்டமிடப்படுகின்ற நேரத்தில் ஆரம்பித்து ஒப்பந்தம் மூடப்படுகின்ற நேரத்தில் முடிவடைவதனை எடுத்துக்காட்டுகின்றது.


6 உலக வங்கி, கொள்வனவு வழிகாட்டல், ஒப்பந்த முகாமைத்துவ நடைமுறை, (2018), பக்கம் 4

இது, ஒப்பந்த முகாமைத்துவ நடவடிக்கைகள், ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் பின்னரான நடைமுறைப்படுத்தலில் மட்டுமன்றி (கீழ் நோக்கிய நடவடிக்கைகள்) கொள்வனவிற்குத் திட்டமிடல், பொருத்தமான உடன்படிக்கை வகையினைத் தெரிவுசெய்தல் மற்றும் ஒப்பந்தக்காரர்களைத் தெரிவுசெய்யும் கட்டம் (மேல் நோக்கிய நடவடிக்கைகள்) மீதும் கவனத்தினைச் செலுத்துகிறது. மறுசொற்களில் கூறுவதாயின், மேலேயுள்ள வரைபடம் 1இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு ஒப்பந்த முகாமைத்துவத்தின் வெற்றியானது கீழ் நோக்கிய நடவடிக்கைகள் அதேபோன்று மேல் நோக்கிய நடவடிக்கைகள் இரண்டினதும் செல்வாக்கிற்குட்பட்டிருக்கிறது.

### அரச கொள்வனவுச் செய்முறையில் "ஒப்பந்த முகாமைத்துவம்" ஏன் முக்கியமானது?

ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினர்களையும் பிணிக்கின்ற ஒப்பந்தமொன்றினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குப் புறம்பாக, காத்திரமான ஒப்பந்த முகாமைத்துவம், அரச கொள்வனவின் முக்கிய குறிக்கோள்களிலொன்றான பணத்திற்கான பெறுமதியினை எய்துவதற்கு வசதியளிக்கிறது. இதனை, ஒப்பந்தத்தில் இணைக்கப்பட்டவாறும் தேவைப்படுத்தப்பட்ட மாதிரி அளவுகளுக்கிணங்கவும் இணங்கப்பட்ட விலை வீச்சிற்குள் நியமங்கள் அத்துடன்/ அல்லது தரங்களில் வழங்கத்தக்க விடயங்கள் பூர்த்திசெய்யப்பட்டமையினை

**வரைபடம் 1: ஒப்பந்தமொன்றின் கீழ் நோக்கிய மற்றும் மேல் நோக்கிய கட்டங்கள்**




- பொருள் கொள்வனவுத் திட்டமிடல்
- அனைத்தையுமுள்ளடக்கிய அளவு மாதிரிகள்
- சரியான ஒப்பந்தத்தினைத் தெரிவுசெய்தல்
- வெற்றிகரமான விலைக்குறிப்பீட்டாளர்/ வழங்குநரை கவனமாகத் தெரிவுசெய்தல்

**ஒப்பந்தத்தினை வழங்கல்**

- ஆற்றல் வாய்ந்த ஒப்பந்த முகாமைத்துவத் திட்டம்
- முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த வழங்கல் முகாமைத்துவம்
- சிறந்த உறவுமுறை முகாமைத்துவம்
- முறையியல் சார்ந்த நிருவாகம்
- தற்பொழுது இடம்பெற்றுவருகின்ற கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

மூலம்: உலக வங்கி, கொள்வனவு வழிகாட்டல்: ஒப்பந்த முகாமைத்துவ நடைமுறை (2018).

உறுதிப்படுத்துவதன் மூலம் அடைய முடியும். எனவே, ஒப்பந்த முகாமைத்துவம் மேலேயுள்ள வரைபடம் 1இல் விளக்கப்பட்டவாறு பொது ஒப்பந்தங்களின் ஆயுள் காலம் முழுவதும் தொடரும். மறுசொற்களில் கூறுவதாயின் ஒப்பந்த முகாமைத்துவம் திட்டமிடலுக்குப் பின்னாலுள்ள குறிப்பிட்ட கொள்வனவின் ஒவ்வொரு நடவடிக்கையினையும் அத்தகைய திட்டத்தினை நடைமுறைப்படுத்திக் கொள்வனவுச் செய்முறையினைக் கண்காணித்தல் மற்றும் குறிப்பிட்ட கொள்வனவின் குறிக்கோள்கள் அடையப்பட்டனவா என்பதனைக் கண்டறிதல் என்பனவற்றை வலியுறுத்துகின்றது.

4. **ஒப்பந்த முகாமைத்துவத்திற்கான ஆற்றல் வாய்ந்த கோட்பாடுகள்**

அநேக நாடுகளிலுள்ள அரசாங்கங்கள், பொதுத் துறைக் கொள்வனவுச் செய்முறைகளில் ஈடுபட்டுள்ள அநேக நிறுவனங்களினால் சிறந்த நடைமுறைகளிலிருந்து தோன்றுகின்ற பல ஒப்பந்த முகாமைத்துவக் கோட்பாடுகளை அடையாளம் கண்டிருக்கின்றன. பொதுவாக பின்பற்றப்படுகின்ற ஒப்பந்த முகாமைத்துவக் கோட்பாடுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

(i) **புரிந்தும் புரிந்து கொண்டதும்:** ஒப்பந்தங்களை வழங்குவதற்கு மிக முன்னதாகவே மூலவளங்களைப் போதுமானளவில் ஒதுக்குதல் உட்பட ஒப்பந்தத்துடன் தொடர்பான அனைத்துத் தரப்பினர்களும் ஒப்பந்தத்திலுள்ள அனைத்து நியதிகளையும் நிபந்தனைகளையும் உறுதிப்படுத்துதல்.

(ii) **தெளிவான வகிபாகங்களும் பொறுப்பாண்மைகளும்:** நியமனமும் வகிபாகம் மற்றும் பொறுப்பாண்மைகளின் எல்லைகளும் போதுமான மூப்புக்களுடன் பொருத்தமான மட்டங்களில் காணப்பட்டன. இவை ஒப்பந்த சொத்துரிமை முகாமைத்துவம் மற்றும் ஆளுகைப் பொறிமுறைகள் பொறுப்புக்கூறும் தன்மையுடன் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஒப்பந்த முகாமைத்துவ திட்டத்தில் தெளிவாக ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

(iii) **உபாய மேற்பார்வை:** ஆளுகை அமைப்புக்கள் ஒப்பந்தத்தின் அளவிற்கும் அதனுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளுக்கும் விகிதாசாரமுடையதாகக் காணப்படல் வேண்டுமென்பதுடன் கொள்வனவுச் செய்முறையின் பெறுபேறுகளுக்கும் குறிக்கோள்களுக்கும் ஆதரவளிப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

(iv) **இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை:** விழிப்பு மற்றும் முகாமைத்துவம் என்பன இணைந்த இடர்நேர்வுகளைக் கொண்ட ஒப்பந்தம் சுய முகாமைப்படுத்தலைக் கொண்டிருந்த வேளையில் உயர்ந்த பயனைக் கொண்ட உபாய ஒப்பந்தங்கள் தொடர்ச்சியாக நுண்ணாய்வு செய்யப்படுகின்றன.

(v) **பொதுச் சேவைகளின் பெறுபேறு:** வெற்றிகரமான பெறுபேறுகளின் அதாவது பணத்திற்கான பெறுமதியின் மீது கவனம் செலுத்தப்படும் வேளையில் பொதுச் சேவையின் பொறுப்புக்கூறும் கடப்பாடுகளை அவதானித்தல். ஒப்பந்தத்திற்குரிய தரப்பினர்கள் வெற்றிகரமான பெறுபேற்றிற்காக ஒரே கவனத்துடன் ஒரே குழுவாக வேலை செய்தல்.

(vi) **எந்த ஒருவருக்கும் எந்தவொரு நேரத்திலும் மாற்றங்கள் நிகழலாம்:** ஒப்பந்தமொன்றின் ஆயுள் காலப்பகுதியில் ஒப்பந்தத்தின் எந்தவொரு தரப்பினருக்கும் எந்தவொரு நேரத்திலும் மாற்றங்கள் நிகழக்கூடும் என்ற உண்மையினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். எனவே, மாற்றங்களை முகாமைப்படுத்துவதற்கு நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த அணுகுமுறையினைப் பின்பற்றுவது அவசியமாகவுள்ள வேளையில் ஒப்பந்தத்தின் உபாய நோக்கம் அத்தகைய மாற்றங்களின் காரணமாக மாற்றப்படாமல் இருப்பதும் உறுதிப்படுத்தப்படுகிறது. இலாபம் எதிர் மிகையான இலாபம் அல்லது இழப்பு எதிர் பொருண்மிய இழப்பு என்பனவற்றிற்கிடையிலான மதிப்பீட்டு நெகிழ்ச்சித்தன்மையின் அளவினைத் தீர்மானிக்க வழிவகுக்கும்.

(vii) **சிறந்த செயலாற்றத்தினை மேலும் ஊக்குவித்தல்:** செயலாற்ற அளவு முறை தரவுகளுடன் கூடிய அடிப்படை அளவுக்குறியீட்டின் முன்கூட்டிய நிருவாகம் (பிரதான செயலாற்றக் குறிகாட்டிகளின் சாதனை) ஒப்பந்தத்தின் பெறுபேறுகளை முகாமைப்படுத்துவதற்கு உதவும். அத்தகைய அடிப்படை அளவுக்குறியீடுகளை எய்துவதற்கான கிரமமான ஊக்குவிப்புக்கள் ஒப்பந்தத்தின் ஆயுள்காலம் முழுவதற்குமான சிறந்த செயலாற்றத்தினை உறுதிப்படுத்தும்.

(viii) **தொடர்ச்சியான மேம்பாடுகள் மற்றும் புத்தாக்கம்:** ஒப்பந்தத்தின் கட்டமைப்பிற்குள் மேம்பாடுகளை அடைவதற்காக ஒப்பந்தச் சாதனங்களைத் தீவிரமாகப் பயன்படுத்தல் மற்றும் புத்தாக்க யோசனைகளை வசதிப்படுத்தல்.

வெளிப்படைத்தன்மையினையும் பாரபட்சமற்ற தன்மையினையும் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவது மேற்குறிப்பிட்ட எட்டு (8) கோட்பாடுகளையும் ஒன்றிணைக்கும்.

5. **"நோக்கங்களுக்கான பொருத்தம்" ஒப்பந்த முகாமைத் திட்டத்திற்கான திறவுகோல்**

தொழிற்பாடு மற்றும் கண்காணிப்பு வசதிகளுக்காக, ஒவ்வொரு கொள்வனவுச் செய்முறைகளுக்காகவும் மேலே

பந்தி 4இல் விபரிக்கப்பட்டவாறான கோட்பாடுகளின் அடிப்படையில் ஒப்பந்த முகாமைத்துவத் திட்டங்களை வடிவமைப்பது அரச நிறுவனங்களுக்கு முன்மதியுடைய விடயமாக இருக்கும். ஒவ்வொரு ஒப்பந்த முகாமைத்துவத் திட்டமும் ஒவ்வொரு நிறுவனத்தினதும் தனித்துவமான தேவைப்பாடுகளுக்காக அமைக்கப்பட்டதும் முறையியல் சார்ந்ததுமான அணுகுமுறைகளை வழங்குகின்ற முறையில் வடிவமைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குறிப்பிட்ட கொள்வனவுச் செய்முறையின் நோக்கத்திற்குப் பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும். திட்டத்திற்குள் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையும் செயற்பரப்பு, பெறுமதி, சிக்கலானதன்மை, ஒப்பந்த காலம் மற்றும் அதனுடன் இணைந்த இடர்நேர்வுகள் என்பனவற்றிற்கு விகிதாசாரமாக இருப்பது முக்கியமானதாகும். ஒப்பந்த முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகளைக் கீழே காணலாம்.

6. **அரச துறை ஒப்பந்த முகாமைத்துவத்தில் பரிசீலனையில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்**

ஆற்றல் வாய்ந்த ஒப்பந்த முகாமைத்துவ திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்த போதும் கூட, அரச துறை நிறுவனங்கள் திட்டத்தினை நடைமுறைப்படுத்தவோ அல்லது பணத்திற்கான பெறுமதியின் விரும்பத்தக்க மட்டத்தினை எய்தவோ முடியாமல் போன சம்பவங்களும் காணப்படவே செய்கின்றன. “பொதுமக்கள் நலவுரித்து” என்ற குடையின் கீழ் பல் குறிக்கோள்கள் அல்லது பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்ற சூழலொன்றில் அரச துறை தொழிற்படுகின்றது. இது ஒப்பந்த முகாமைத்துவத்திற்கு எந்தவொரு நேரடி வியாபார கவனத்தினையும் செலுத்தாத நிலைமைக்கு இட்டுச்செல்லும் என்பதுடன் “பொதுமக்கள் நலவுரித்தில்” உள்ளடக்கியுள்ள வேறுபட்ட கருத்திற்கும் பயனளிக்கும்.

மறுபுறத்தில், அரச துறை கொள்வனவுடன் தொடர்பான சட்டம் மற்றும் கொள்கைத் தேவைப்பாடுகளின் வீச்சு, பொதுவாகவும் ஒப்பந்த முகாமைத்துவத்திலும் காணப்பட்டதுடன், குறிப்பாக இது காலத்திற்குக் காலம் வேறுபடுகிறது. இத்தேவைப்பாடுகளில் பல ஒப்பந்தங்களில் பிரதிபலிக்கப்பட்டிருப்பதுடன் அத்தேவைப்பாடுகளுடன் கூடிய இணங்குவிப்புக்களைக் கண்காணிப்பதற்கு அரச துறையில் குறித்துரைக்கப்பட்ட தேர்ச்சி அவசியமாகிறது. பெரும்பாலும், தேவைப்படுகின்ற தேர்ச்சி இணங்குவிப்புக்களைக் கண்காணிப்பதற்கு மட்டுமன்றி, அரச நிறுவனங்களில் இருக்க வேண்டுமென தேவைப்படுத்தப்படும் மற்றைய தேர்ச்சிகளைப் போன்றே

- ஒப்பந்தத்தின் மிக ஆரம்பத்தில் ஒவ்வொரு தரப்பினராலும் ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரமளித்தல்/ ஒப்படைத்தலின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் ஒவ்வொரு தரப்பினரினதும் வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் வெவ்வேறாகப் பிரித்தல்.
- ஒப்பந்த முகாமைத்துவம் தொடர்பில் நிறுவனத்தில் நிலவுகின்ற ஆளுகை அமைப்பு.
- தொடர்பானதாக இருக்குமிடத்து, தனியொரு கொள்வனவுச் செய்முறையில் பகுதிகளாக இருக்கின்ற முக்கிய ஒப்பந்தங்களின் பட்டியல்.
- ஒப்பந்தத்தின் ஆவணங்கள் உட்பட அனைத்து முக்கிய ஒப்பந்த ரீதியான நியதிகளையும் நிபந்தனைகளையும் திரட்டுதல் (இது காப்புறுதி, உத்தரவாதம் அல்லது பிணையங்கள், விலைச்சீராக்க சூத்திரங்கள் போன்றவற்றை உள்ளடக்கும்)
- கொள்வனவுச் செய்முறையில் எதிர்பார்க்கப்படுகின்ற முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் மற்றும் நியமங்கள்/ அளவுமுறை செய்முறை போன்ற முக்கியமான மைல்கற்கள்
- துல்லியமானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான ஒப்பந்த பெறுபேறுகள்
- அறிக்கையிடுகின்ற தேவைப்பாடுகள்/ அறிக்கையிடுகின்ற கால இடைவெளி மற்றும் அறிக்கையிடுகின்ற மார்க்கங்கள்
- ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு கொடுப்பனவு நடைமுறைகள்

- பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் இணைக்கப்பட்ட நடைமுறைகள்
- கிரமமான கணக்காய்வுகளை நடத்துகின்ற விதம்
- ஒப்பந்தங்களைத் திருத்துதல் மற்றும் அத்தகைய மாற்றங்களை எவ்வாறு முகாமைப்படுத்துவது என்ற முறை
- ஒப்பந்தத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணக்குகளின் முகாமைத்துவம், உயர்விற்கான நடைமுறைகள் மற்றும் நிவாரணங்கள்
- ஆர்வலர்களின் ஈடுபாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ திட்டம் (திட்டங்கள்)
- ஒப்பந்தமொன்றை முடிவுறுத்துவதற்கான நடைமுறைகள்

போதுமான முன்னுரிமை வழங்கப்படாத ஒப்பந்தத்தினைக் காத்திரமான விதத்தில் முகாமைப்படுத்துவதற்கும் அவசியமாகிறது. கொள்வனவுச் செய்முறையில் ஒப்பந்தங்களை முகாமைப்படுத்துவதற்கு தேர்ச்சியும் இயலாற்றலும் போதுமானளவிற்கு இல்லாமை ஆற்றல் வாய்ந்த ஒப்பந்த முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்ட முன்னுரிமையில் குறைபாட்டினைத் தோற்றுவித்து செய்முறையின் இறுதிக் குறிக்கோள்களை ஆபத்திற்குள்ளாக்கிவிடும்.

எனினும், செய்முறையின் ஆரம்பத்திலும் ஒப்பந்தத்தின் தரப்பினர்களுக்கிடையேயும் தெளிவான பொறுப்புக்கூறும் தன்மையினையும் கவனத்தினையும் நடைமுறையில் கொண்டிருப்பது செய்முறையினை ஆரம்பித்த நேரத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு பெறுபேறுகள் வெற்றிகரமாகக் கிடைக்கப்பெறுவதனை சாத்தியமாக்கும்.

## 7. முடிவுரை

பெரும்பாலான "பொதுமக்கள் நலவுரித்துக்களின்" நன்மைகள் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளினூடாக வழங்கப்படுவதனால் அரச துறை கொள்வனவுச் செய்முறையின் இன்றியமையாத மூலக்கூறாகக் காத்திரமான ஒப்பந்த முகாமைத்துவம் விளங்குகிறது. வெற்றிகரமான ஒப்பந்த முகாமைத்துவத்திற்கு, நன்கு வடிவமைக்கப்பட்ட கொள்வனவுக் கட்டம், ஒப்பந்த முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதில் தேர்ச்சிபெற்ற மூலவளங்கள் மற்றும் ஒப்பந்தத்தின் ஆயுள்காலம் முழுவதிலும் உறவுமுறைகளை வெற்றிகரமாகக் கையாளுதல் உட்பட, பல்வேறுபட்ட அம்சங்கள் தேவைப்படுகின்றன. பல்வேறு விடயங்களைப் பொறுத்தவரை, ஒப்பந்த முகாமைத்துவம், ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் ஒப்பந்தம் வழங்கப்பட்ட நேரத்தில் விரும்பப்பட்ட பணத்திற்கான பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதனையும் ஒப்பந்த நடைமுறைப்படுத்தலின் போது காணப்படும் இடர்நேர்வுகளைக் குறைத்துக் கொள்வதனையும் அதன் மூலம் அத்தகைய பணத்திற்கான பெறுமதியினால் அடையப்படுவதற்கான நிகழ்தகவு அதிகரிக்கப்படுவதனையும் உறுதிப்படுத்தும்.

**உசாத்துணை நூல்கள்:**

Australian Government Solicitor, Competitive Tendering and Contracting – Strategic and Legal Issues, Legal Briefing No. 35 (1997).

Commonwealth Procurement Guidelines, (2020).

Khan N, Public Procurement Fundamentals: Lessons from and for the field, (2018), Emerald Publishing, UK.

National Procurement Commission of the Democratic Socialist Republic of Sri Lanka, Procurement Guidelines, (2019), Gazette Extraordinary No. 2144/68 dated 12.10.2019.

The World Bank Policy, Procurement in Investment Project Financing and Other Operational Procurement Matters, (2016).

The World Bank, Procurement Guidance: Contract Management Practice, (2018), First Edition, Washington DC, USA.

UN Interagency Procurement Working Group, UN Procurement Practitioner's Handbook, (2012), Revision 1.1.

# நாணயக் கொள்கை நவீனமயப்படுத்தல் – உலகளாவிய நோக்கு மற்றும் இலங்கையின் அனுபவம்

**முனைவர் சுஜீத்தா ஜெகஜீவன்**[1]
பிரதிப் பணிப்பாளர்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

### 1. அறிமுகம்

உலகம் முழுவதிலும் காணப்படும் நாணயக் கொள்கை கட்டமைப்பு பல தசாப்தங்களாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் தங்க நியமத்திலிருந்து தற்பொழுது காணப்படும் பணவீக்க இலக்கிடல்/ நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் வரையிலான அநேக திருத்தியமைத்தல்களுடன் பரிணாம வளர்ச்சியொன்றினைக் கண்டிருக்கின்றது. ஒவ்வொரு அமைப்பும் குறிப்பிட்ட செயற்கிரமங்கள், நிறுவன ரீதியான ஏற்பாடுகள், விதிகள் மற்றும் கோட்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்ததுடன் ஒரு கட்டமைப்பானது நாணயக் கொள்கையின் எதிர்பார்த்த குறிக்கோளை எய்தமுடியாமல் போவதற்கு இவை காரணமாக அமையக்கூடும் என்பதுடன் தொடர்ந்துவரும் கட்டமைப்புக்கள் உருவாகுவதற்கும் இவை காரணமாகவிருந்திருக்கக்கூடும். தற்போதுள்ள நாணயக் கொள்கை ஏற்பாடுகளின் பொருத்தமான தன்மையும் வெற்றியும் வெளிநாட்டு உலகளாவிய சூழ்நிலையிலும் உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் நிலைமைகளிலும் ஏற்படுகின்ற சம்பவங்கள் மற்றும் அபிவிருத்திகளினால் அடிக்கடி சவாலுக்குட்படுகின்றன. பணவீக்கத்தினைச் சமநிலைப்படுத்துகின்ற போது நாடுகளினால் அதிகரித்தளவிற்குப் பின்பற்றப்பட்டு வருகின்ற நாணயக் கொள்கை நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சிநிரலுக்காக வழியமைத்துக் கொடுத்திருக்கும் பாரம்பரிய நாணயக் கொள்கை வடிவமைப்பில் காணப்படும் அடிப்படைப் பிரச்சனைகளை எடுத்துக்காட்டுவதனை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. தற்போதுள்ள மேம்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை செய்முறையில் மாதிரியுருவமைத்தல் மற்றும் எதிர்வுகூறலின் வகிபாகத்தின் மீது பெருமளவு வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இக்கட்டுரையானது இலங்கையின் பின்னணியில் நாணயக் கொள்கை நவீனமயப்படுத்தலில் காணப்பட்ட முன்னேற்றம் மற்றும் மாதிரியுருவமைத்தலின் அனுபவம் என்பனவற்றைச் சுருக்கமாகத் தருகிறது.

### 2. நாணயக் கொள்கை நவீனமயப்படுத்தல் - உலகளாவியதொரு நோக்கு

நாணயக் கொள்கைக் கட்டமைப்பானது நாடுகளுக்கிடையேயும் நாட்டிற்குள்ளே வெவ்வேறு காலப்பகுதியிலும் வேறுபடுகின்றது. இக்கட்டமைப்புக்கள் மத்திய வங்கியின் குறிக்கோள்கள், நிறுவன ரீதியான அமைப்பு, நாணயக் கொள்கை உபாயம், கொள்கைச் சாதனங்கள் மற்றும் தொடர்பூட்டல் உபாயம் போன்ற பொதுவான கூறுகளைப் பகிர்ந்து கொள்கின்றன. இக்கட்டமைப்பின் இயக்கவாற்றல் நாடு மேற்கொள்கின்ற நாணயக் கொள்கைக் கட்டமைப்பினை வரைவிலக்கணம் செய்கிறது. நாணயக் கொள்கைக் கட்டமைப்பினையும் நாணயக் கொள்கைச் செய்முறையினையும் வரைவிலக்கணம் செய்வது கோட்பாட்டு ரீதியில் எளிமையானதாகவும் ஒளிவுமறைவற்றதாகவும் இருக்கின்ற போதிலும் மிகவும் பொருத்தமான கட்டமைப்பு மற்றும் நாணயக் கொள்கைச் செய்முறையினைத் தீர்மானித்துக் கொள்வதில் மத்திய வங்கிகள் நடைமுறையில் பெருமளவு இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றன. இவை நாணயக் கொள்கையினை நடத்துவதனை யதார்த்த உலகில் மிகச்சிக்கல் வாய்ந்ததொன்றாக்கியுள்ளது. பாரம்பரிய நாணயக் கொள்கை வடிவமைப்பானது பின்னோக்கியதாக, பொருளாதார முகவர்களின் கடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்ட எதிர்பார்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இப்பின்னணியில், மத்திய வங்கிகள் பொருளாதாரத் தோற்றப்பாடு பற்றிய எதிர்பார்ப்புக்கள் மீதான சிறிதளவிலான வலியுறுத்தலுடன் பேரண்ட பொருளாதார நிலைமைகளின் கடந்த கால மற்றும் நிகழ்கால அபிவிருத்திகளுக்குப் பதிலிறுத்தன. குறிப்பாக, தாழ்ந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளிடையேயான அனுபவங்கள், மரபுவழி நாணயக் கொள்கைக் கட்டமைப்பு மற்றும் கொள்கை நடைமுறைப்படுத்தல்

---

1 ஆசிரியர், மீளாய்வினை மேற்கொண்ட முனைவர் சந்திரநாத் அமரசேகரவிற்கு அவரது பெறுமதிமிக்க கருத்துக்களுக்காகவும் ஊக்குவிப்பிற்காகவும் திரு. நவீன் பெரேராவிற்கு இக்கட்டுரையின் மொழிநடையினை மெருகூட்டியதற்காகவும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறார்.

என்பனவற்றின் கீழ் நாடுகள் எதிர்நோக்க வேண்டியிருந்த பின்வரும் முக்கிய சவால்களை எடுத்துக்காட்டின (IMF, 2015).

- பல்வேறு, முரண்பாடான குறிக்கோள்கள் மற்றும் விலை உறுதிப்பாட்டின் முக்கியத்துவம் போதுமானதாக இல்லாமை
- மத்திய வங்கியின் நிறுவன ரீதியான மற்றும் தொழிற்பாட்டு ரீதியான சுயாதீனம் போதுமானளவில் இல்லாமை
- செலாவணி வீத உறுதிப்பாட்டில் அத்துடன்/ அல்லது வளர்ச்சி உறுதிப்பாட்டின் மீது காணப்படும் கூடுதலான வலியுறுத்தல்
- இலக்குகளிலிருந்து அடிக்கடி விலகல்கள் காணப்பட்ட போதும் கணியம்சார் இலக்கிடல் மீதான (நாணய இலக்கிடல்) வலியுறுத்தல்
- காத்திரமான முன்னோக்கிய பார்வையுடன் கூடிய நாணயக் கொள்கை வடிவமைப்பிற்கான பகுப்பாய்வு இயலாளவு மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றமை
- காத்திரமற்ற ஆளுகை மற்றும் நிறுவனம் சார்ந்த அமைப்பியல்
- காத்திரமற்ற மத்திய வங்கி தொடர்பூட்டல் மற்றும் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறும் தன்மையும் போதுமானதாக இல்லாமை
- இறை ஒழுக்கவியலும் இறை - நாணய இணைப்பும் போதுமானளவில் இல்லாமை
- நலிவடைந்த ஐந்தொகையும் வரவு செலவுத்திட்ட சுயாதீனமும்
- காத்திரமான கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கான தொழிற்பாட்டு இயலாற்றல் போதுமானதாக இல்லாமை

மரபுவழி நாணயக் கொள்கை நடத்தையில் காணப்பட்ட இந்நடைமுறைப் பிரச்சனைகளும் அதன் விளைவான விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதிலான தோல்விகளும் நாணயக் கொள்கைச் செய்முறையில் நவீனமயப்படுத்தலைத் தேவைப்படுத்தின. நியூசிலாந்து, கனடா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்கள் இரண்டு தசாப்த காலங்களுக்கும் கூடுதலான காலப்பகுதிக்கு முன்பே நவீன நாணயக் கொள்கை அமைப்பிற்கு மாறிய வேளையில் தோற்றம்பெற்று வரும் பொருளாதாரங்கள் அண்மைக் காலங்களில் படிப்படியாக தமது இணைத்தரப்பினரின் சுவடுகளைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன.

நவீன நாணயக் கொள்கையானது பின்வரும் முக்கிய கோட்பாடுகளினால் ஆளப்படுகிறது:

### ❖ விலை உறுதிப்பாட்டு பொறுப்பாணை

விலை உறுதிப்பாடு நாணயக் கொள்கையின் முக்கியமான அல்லது அளவிற்கு விஞ்சிய குறிக்கோளொன்றாக மிகத் தெளிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற வேளையில், செலாவணி வீத உறுதிப்பாடும் நிதியியல் உறுதிப்பாடும் துணையளிக்கும் குறிக்கோள்களாக விளங்கும். விலை உறுதிப்பாட்டின் முதன்மையான ஸ்தானத்திற்குப் பின்னாலுள்ள பகுத்தறிவுவாதம் யாதெனில் பல்நோக்கு மற்றும் முரண்பாடான குறிக்கோள்களை எய்துவதற்கு நாணயக் கொள்கையை மாத்திரம் எதிர்பார்க்கக்கூடாது என்பதேயாகும். விலை உறுதிப்பாட்டு பொறுப்பாணை இல்லாதவிடத்து நாணயக் கொள்கை உருவாக்கம் குறுங்கால பொருளாதார அத்துடன்/ அல்லது அரசியல் அழுத்தங்களுக்கு இயல்பாகவே சுலபமாக உள்ளாகக்கூடும். இது நடைமுறையில் சவால்மிக்கதாகக் காணப்படுகின்ற போதும் கூட, இதில் வெற்றி பெற்ற நாடுகளின் அனுபவம், விலை உறுதிப்பாட்டு குறிக்கோளுக்கான நம்பகமான கடப்பாட்டிற்கான தேவையினை வலியுறுத்துகிறது. இது ஏனைய தகைமை வாய்ந்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளக்கூடிய வசதியினை பின்னர் வழங்கும். அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் தோற்றம் பெற்று வருகின்ற பொருளாதாரங்கள் அவற்றின் தொடர்பான பொறுப்பாணைகளில் தெரிவிக்கப்பட்டவாறு நாணயக் கொள்கையினூடான விலை உறுதிப்பாட்டிற்குப் புறம்பாக, மற்றைய குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றன. சட்டவாக்கத்தின் மூலம் மாத்திரம் விலை உறுதிப்பாட்டு பொறுப்பாணையினை அடைந்து கொள்வதென்பது, நாணயக் கொள்கை குறிப்பிட்ட காலப்பகுதியில், விலை உறுதிப்பாடு மேலாக நடைமுறையில், செலாவணி உறுதிப்பாட்டிற்கு அல்லது வளர்ச்சி கரிசனைகளுக்கு முன்னுரிமையளிக்கின்றமையை தடைசெய்யாது என்பதனைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். சட்டவாக்கப் பொறுப்பாணையானது விலை உறுதிப்பாட்டினை மையமாகக் கொண்ட நம்பகமான நாணயக் கொள்கை உருவாக்கத்தின் மூலம் உத்தரவாதப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ❖ சுயாதீனமான தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை, வெளிப்படைத்தன்மை

நாணயக் கொள்கையின் காத்திரமான தன்மை, இலக்கு மற்றும் தொழிற்பாட்டுச் சுயாதீனம் ஆகிய நியதிகளில் தெளிவான பொறுப்பாணையொன்றின் மீது தங்கியிருக்கிறது. நவீன மத்திய வங்கிகள் நிறுவன ரீதியான மற்றும் தொழிற்பாட்டு ரீதியான சுயாதீனம் இரண்டினையும் பெருமளவிற்குக் கொண்டிருக்கின்றன. இறை ஆதிக்கம், அரசியல் செல்வாக்கு போன்றவற்றிலான விடுதலை

சுயாதீனமாக குறிக்கோள்களை எய்துவதற்கு நாணயக் கொள்கைக் கருவிகளைத் தெரிவுசெய்வதற்கு மத்திய வங்கிகளுக்கு சுயநிர்ணயத்தன்மையினை வழங்குகின்றது. மத்திய வங்கிகளின் சுயாதீனம், பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பனவற்றின் மட்டங்களை அளவிடுவதற்கு ஆராய்ச்சியாளர்களினால் பல்வேறு சுட்டெண்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. பொறுப்புக்கூறும் தன்மை இல்லாத சுயாதீனம் விரும்பத்தக்கதல்ல. அரசாங்கத்திற்குப் பொறுப்புக் கூறுகின்ற மரபுமுறைகளுக்கு மாறாக தற்பொழுது மத்திய வங்கிகள் கூடியளவிற்கு பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. மத்திய வங்கிகளின் குறிக்கோள்களைத் தொடர்கின்ற விதத்தில் அவற்றின் பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறும் தன்மை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட சுயாதீனம் நிபந்தனையற்றது அல்ல என்பதனை உறுதிப்படுத்துகின்றது. வெளிப்படைத்தன்மை என்பது மத்திய வங்கியின் பொதுமக்களுக்கான பொறுப்புக்கூறும் தன்மையினை மதிப்பிடுவதற்கான ஒரு கருவியாக விளங்குகிறது. தொழில்சார் "இரகசியத்தன்மை" கொண்டது என அங்கீகரிக்கப்பட்டு வந்த மத்திய வங்கித்தொழில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்குட்பட்டு தற்பொழுது மிக வெளிப்படையானதும் பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூறுகின்றதுமான தொழில்சார் தன்மைகளுக்கு மாற்றமடைந்திருக்கிறது.

### ❖ முன்னோக்கிய கொள்கை உபாயம்

பெடரல் ஒதுக்கின் முன்னாள் தலைவர் அலன் கிறீன்ஸ்பான் "நாணயக் கொள்கையின் சவால்கள் என்பது பொருளாதாரம் மற்றும் நிதியியல் சந்தைகள் மீதான தற்போதைய தரவுகளை எதிர்பார்க்கின்ற எதிர்காலப் பணவீக்க விசைகளை அடையாளம் காணும் வகையில் விளங்கிக் கொள்வதும் முன்கூட்டியே தொழிற்படுவதன் மூலம் அவற்றிற்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதுமாகும்" என சுட்டிக் காட்டுகின்றார். நாணயக் கொள்கை உருவாக்கத்தில், முன்னோக்கிய சிந்தனை என்பது நடைமுறைப் பொருளாதார நிலைமைகளின் அபிவிருத்தி, முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளுக்கான தோற்றப்பாடு மற்றும் நடுத்தர காலப் பணவீக்க குறிக்கோளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு இடர்நேர்வுகளின் மதிப்பீடொன்றுடன் கூடிய தொடர்பான எறிவுகள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு கொள்கை உபாயங்களை உருவாக்கும் போது பயன்மிக்கதாக அமைகிறது. உண்மைப் பேரண்டப் பொருளாதார மாறிகள் மீதான நாணயக் கொள்கை வழிமுறைகள் முழுமையான தாக்கம் காலங்கடந்த பின்னர் மட்டுமே அவதானிக்கப்படுவதனால் விரும்பத்தக்க மட்டத்தினை விட பணவீக்கம் அதிகரிக்கும் வரை நாணயக் கொள்கை நடவடிக்கையினைப் பிற்போடுவது பொருத்தமான செயலாக இருக்காது. இது பின்னோக்கிய நாணயக் கொள்கையென அறியப்படுகின்றது. சரியான நேரத்திலமைந்த அனைத்தையுமுள்ளடக்கிய கொள்கை பகுப்பாய்வு முறையினால் துணையளிக்கப்பட்ட மிகத் தெளிவான முன்னோக்கிய நாணயக் கொள்கை நவீன நாணயக் கொள்கைக் கோட்பாடுகளின் இன்றியமையாத கூறொன்றினை உருவாக்குகிறது. இவ்வுபாயமும் பொருளாதார முகவர்களின் அறிவுசார்ந்த எதிர்பார்ப்புக்களுக்கு முன்னுரிமையளிப்பதுடன் விரும்பத்தக்கப் பாதையினை நோக்கி அவர்களது எதிர்பார்ப்புக்களை வடிவமைப்பதற்கும் முன்னுரிமையளிக்கின்றது. முன்கூட்டிய கொள்கை உபாயத்தின் காத்திரமான தன்மை நம்பகமான நடுத்தரகால எறிவுகள், கொள்கை உருவகப்படுத்தல்கள், இடர்நேர்வு பகுப்பாய்வு மற்றும் மாற்று உருவகப்படுத்தல்களின் பகுப்பாய்வு என்பனவற்றின் கிடைப்பனவில் பெருமளவிற்கு தங்கியிருப்பதனால், நவீன மத்திய வங்கிகள் அவற்றின் மாதிரியுருவமைத்தல் மற்றும் எதிர்வுகூறல் இயலாற்றலினை மேம்படுத்துவதில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன. நாணயக் கொள்கை உருவாக்கத்திற்கான முன்னோக்கிய அணுகுமுறை பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்களின் தளம்பல்களைக் குறைத்திருப்பதுடன் தற்காலிகமான அதிர்வுகளுக்குப் பொருளாதாரம் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை அதிகரித்து கொள்கை தொடர்பூட்டலையும் மேம்படுத்துகிறது.


### ❖ காத்திரமான நாணயக் கொள்கை தொடர்பூட்டல்

எதிர்பார்ப்புக்களை உறுதிப்படுத்துவதனை நோக்கி நாணயக் கொள்கை நடவடிக்கைகளை வெளிப்படையாகவும் சரியான நேரத்திலும் தொடர்பூட்டுவதும் பொருளாதார ஆர்வலர்களிடையே நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதும் நாணயக் கொள்கையின் காத்திரமான தன்மையினை உயர்த்துவதற்கான திறவுகோலாகத் தற்பொழுது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார முகவர்களின் எதிர்பார்ப்புக்கள், பொருளாதார முகவர்களின் கொள்கை வகுப்புச் செய்முறையினூடாக நாணயக் கொள்கை ஊடுகடத்தலின் மீது குறிப்பிடத்தக்களவு செல்வாக்கினைக் கொண்டிருக்கின்றன. தற்பொழுது, பெரும்பாலான மத்திய வங்கிகள் பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாடு மற்றும் எதிர்கால நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் பற்றிய பொருளாதார முகவர்களின் எதிர்பார்ப்புக்களை வடிவமைப்பதற்காக தொடர்பூட்டலை கொள்கைச் சாதனமொன்றாக பயன்படுத்துகின்றன. இது, மத்திய வங்கிகள் அவற்றின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவ்வங்கிகளின் இயலாற்றலை மேம்படுத்துகின்றது. தொடர்பூட்டலின் முக்கியத்துவம் உலகளாவிய நிதியியல்

நெருக்கடிகளின் போது அங்கீகரிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் மரபுவழி கொள்கைச் சாதனங்கள் அதிகரித்தளவிற்கு காத்திரமற்றனவாக மாறின. ஆராய்ச்சியாளர்களிடையேயும் மத்திய வங்கியாளர்களிடையேயும் முன்னேற்றம் கண்ட அநேக பொருளாதாரங்களினால் பின்பற்றப்படும் மரபுவழியற்ற நாணயக் கொள்கை வழிமுறைகள், முக்கியமாக, நம்பிக்கையினைக் கட்டியெழுப்பியமையினூடாகவும் “முன்னோக்கிய வழிகாட்டல்களினால்” தூண்டப்பட்ட சமிக்ஞை வழங்கல் மார்க்கங்களின் மூலமுமே அடையப்பட்டது என்ற பொதுவான நம்பிக்கையொன்று காணப்பட்டது (Blot and Hubert, 2018). எனவே, பரந்தளவான நாணயக் கொள்கை நடவடிக்கைகள் பற்றிய சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படுகின்ற காத்திரமான தொடர்பூட்டல்கள் நவீன நாணயக் கொள்கையின் முக்கிய கூறுகளிலொன்றாக விளங்குகின்றது. அண்மைய ஆய்வு Haldane et al. (2020) இன் எளிமைப்படுத்தப்பட்ட தொடர்பூட்டலினூடாக மாத்திரம் எதிர்பார்ப்புக்களை முகாமைப்படுத்துவது அவசியமெனினும் அது போதுமானதல்ல எனத் தெரிவிக்கிறது. மத்திய வங்கிகள் பொதுமக்கள் தொடர்பூட்டலின் 3 முக்கிய விடயங்களில் அதாவது தெளிவாக விளக்குதல், ஈடுபாடு கொள்ளுதல், கல்வியறிவூட்டுதல் என்பனவற்றில் தீவிரமாக ஈடுபடுவது அவசியமாகும். எளிமையான தொடர்பூட்டலில் பரந்தளவு மக்களை இலக்கிடும் போது தொடர்பூட்டல் தவறுகளைத் தணிக்கும் விதத்தில் தீவிரமான ஈடுபாடு மற்றும் கல்வியறிவூட்டுதல் மூலம் அவற்றிற்கு உதவியளிப்பது அவசியமானதாகும்.

மேலே ஆராயப்பட்ட நாணயக் கொள்கை நவீனமயப்படுத்தலின் முக்கிய கோட்பாடுகளை ஆளுகை செய்கையில், பாரம்பரிய நாணயக்

**வரைபடம் 1: புதிய கொள்கை நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சிநிரல்**




Source: Evolving Monetary Policy Frameworks in Low-Income and Oher Developing countries, IMF, 2015

கொள்கையிலிருந்து நவீன நாணயக் கொள்கைக்கு மாறிச் செல்வது தொடர்பான விடயங்கள் வரைபடம் 1இல் விளக்கப்பட்டிருக்கிறது. வரைபடத்தின்படி, நாணயக் கொள்கையானது பல்வேறுபட்டதும் முரண்பாடானதுமான குறிக்கோள்களிலிருந்து விலை உறுதிப்பாடு என்ற தனியொரு குறிக்கோளுக்கு மாற்றமடைந்திருக்கிறது. நவீன நாணயக் கொள்கைச் செய்முறைப்படுத்தலானது மெருகூட்டப்பட்ட நாணயக் கொள்கை ஊடுகடத்தல்கள் மற்றும் அதிகரித்த செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மை என்பனவற்றைக் கொண்ட சூழலொன்றில், பணவீக்க எதிர்வுகூறல்கள் மற்றும் முன்னோக்கிய பொருளாதாரப் பகுப்பாய்வுகள் என்பனவற்றின் மூலம் மெருகூட்டப்பட்டிருக்கிறது. வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்ட நாணயக் கொள்கையின் தொழிற்பாட்டுக் கட்டமைப்பும் சந்தையை அடிப்படையாகக் கொண்ட நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதமும் இந்நவீனமயப்படுத்தல் செய்முறைக்கு உதவியளிக்கின்றன.

### 3. நாணயக் கொள்கை நவீனமயப்படுத்தலில் மாதிரியுருவமைத்தல் மற்றும் எதிர்வுகூறலின் வகிபாகம்

ஏற்கனவே ஆராயப்பட்டவாறு முன்னோக்கிய நாணயக் கொள்கை உருவாக்கச் செய்முறையானது கடந்தகால அல்லது தற்போதுள்ள பணவீக்கம் மற்றும் ஏனைய பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளுக்குப் பதிலிறுத்துகின்ற கொள்கைப் பரப்பிலும் பார்க்க கொள்கை அமைப்பு தொடர்பில் நடுத்தர காலப் பணவீக்க குறிக்கோள்களை (பணவீக்க இலக்கிடல்) எய்துவதனையே நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே, இது, எதிர்காலப் பணவீக்கம் மற்றும் ஏனைய தொடர்பான முக்கிய பேரண்டப் பொருளாதார மாற்றங்களுக்கான நம்பகமான எறிவுகளினதும் எறிவுகளுக்கான முக்கிய இடர்நேர்வுகளை மதிப்பிடுவதிலுமே பெருமளவிற்குத் தங்கியிருக்கிறது. பன்னாட்டு நாணய நிதியம் “எதிர்வுகூறுதல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமை” என அழைக்கப்படும் மாதிரியுருவொன்றினை அடிப்படையாகக் கொண்ட முறைமையொன்றினை முன்னோடியாக உருவாக்கியிருப்பதுடன் பணவீக்க இலக்கிடலினைப் பின்பற்றுகின்ற அல்லது பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்கு மாறிச் செல்கின்ற பல தோற்றம்பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கு எதிர்வுகூறுதல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமையை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறுவன மயப்படுத்தல் விடயங்களில் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலமும் பரந்தளவு உதவிகளை வழங்கி வருகின்றது. எதிர்வுகூறுதல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமையொன்றின் வடிவமைப்பினை நாடுகளின் தேவை மற்றும் பொருளாதாரப் பண்புகளின் தேவை என்பனவற்றிற்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ள முடியும். எதிர்வுகூறுதல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமை அலகுகளின் (கருவிகள்) தொகுப்பொன்றாக இருப்பதுடன் இடர்நேர்வுகள் உட்பட தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் அதன் எதிர்வுகூறல்கள் தொடர்பில் ஒருமித்த கருத்தினை வழங்குகின்ற செய்முறை அமைப்பாகவும் விளங்குகிறது. இந்த அலகுகள் தரவு முகாமைத்துவம், அண்மைக்கால எதிர்வுகூறல்கள் மைய காலாண்டு எறிவு மாதிரியுருவொன்றினை அடிப்படையாகக் கொண்ட நடுத்தரகால எதிர்வுகூறல்கள், எதிர்வுகூறல் அலுவலர் குழு மற்றும் அலுவலர்களின் பகுத்துணர்வு என்பனவற்றை உள்ளடக்குகின்ற வேளையில் ஒழுங்கமைப்பொன்று பொருளாதார இற்றைப்படுத்தல்கள், எதிர்வுகூறல்கள், கொள்கைப் பகுப்பாய்வுகள் மற்றும் இடர்நேர்வு மதிப்பீடுகள் என்பனவற்றைச் சமர்ப்பிப்பதன்பொருட்டான தொடர்ச்சியான கொள்கைக் கலந்தாராய்வுகள் மற்றும் கூட்டங்களை உள்ளடக்குகின்றது.

நடைமுறையில், எதிர்வுகூறுதலும் கொள்கைப் பகுப்பாய்வும் ஒவ்வொரு நாணயக் கொள்கை மீளாய்விற்குமாக வடிவமைக்கப்பட்ட முன்கூட்டியே திட்டமிடப்பட்ட எதிர்வுகூறல் கலண்டர் ஒன்றினைப் பின்பற்றி வருகின்றன. கலண்டரானது மையப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தின் ஆரம்ப இற்றைப்படுத்தலுடன் தொடங்குவதுடன் காலாண்டு இறுதியில் வழமையாகக் கிடைக்காத மொ.உ.உற்பத்தியினை எறிவு செய்கிறது. மாதிரி மதிப்பீட்டிற்கான தரவுகளை நிறுவுவது நிறைவடைந்ததும், அண்மைய கால எறிவுகள் பெறப்படுகின்றன. நாடொன்று உடனடுத்துவரும் எதிர்காலத்தில் இரு காலாண்டுகளுக்கான முக்கியமன பேரண்ட மாறிகளை எறிவு செய்வதற்காக ஒன்று அல்லது பொருத்தமான அண்மைக்கால மாதிரியுருக்களை வைத்திருக்கலாம். அண்மைய எறிவுகள் மற்றும் அலுவலர் பகுத்துணர்வு என்பனவற்றுடன் இசைந்து செல்கின்ற நடுத்தரகால எறிவுகளை உருவாக்குகின்ற மைய காலாண்டு எறிவு மாதிரியுருவின் எதிர்வுகூறல் மற்றும் பகுப்பாய்வு முறைமை கொண்டிருக்கிறது. காலாண்டு எறிவு மாதிரியுருவிலிருந்தான முக்கியமான அடிப்படை எடுகோள்களுடன் கூடிய மூல எறிவுகள் அடிப்படையிலமைந்த எறிவுகள் என அழைக்கப்படுகின்றன. அடிப்படையிலமைந்த எறிவிற்குப் புறம்பாக, நாணயக் கொள்கையினை வகுக்கின்ற முகாமைத்துவச் சபைக்கு அடிப்படை எறிவுகளின் விபரமான இடர்நேர்வு மதிப்பீடுகளும் வழங்கப்படுகிறது. மேலும், மாற்றுக் கொள்கை உருவகப்படுத்தல்கள், தோற்றம்பெற்று வரும் இடர்நேர்வுகள் போன்றவற்றைப் பொருளாதார அபிவிருத்திகளைப் பொறுத்து அபிவிருத்தி செய்ய முடியும். பொருளாதாரத்தின் தன்மையினைப் பொருட்படுத்தாமல், எதிர்வுகூறுதல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமையின் செய்முறைகள் ஒரே மாதிரியானவையாக இருப்பதுடன் அனைத்து நாடுகளிலும் பொதுவான பண்புகளைக் கொண்டுள்ளது.


மாதிரியுருவமைத்தலிலும் எதிர்வுகூறலிலும் பரந்தளவு அனுபவத்தினையும் போதுமான தொழில்நுட்ப மற்றும் நிதியியல் இயலாற்றலினையும் கொண்டுள்ள நாடுகள் சிறந்த தகவல்களுடன் கூடிய நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஆதரவளிப்பதற்கான அமைப்பியல் மற்றும் நேரத்தொடர் மாதிரியுருவமைத்தல்களில் தங்கியிருக்கின்றன. அநேக முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்கள் எதிர்வுகூறுதல் மற்றும் கொள்கை பகுப்பாய்வுகளுக்கான மைய மாதிரியுருவமைத்தல்களாக பொதுவான இயக்கச் சமநிலை (DSGE model) மாதிரியுருவமைத்தல்களைப் பயன்படுத்துகின்றன.

## 4. நாணயக் கொள்கை நவீனமயப்படுத்தல் மற்றும் மாதிரியுருவமைத்தலில் இலங்கையின் அனுபவம்

மரபுவழியான நாணயக் கொள்கைக் கட்டமைப்பிலிருந்து வெளியேறுவதற்கான இலங்கையின் ஆரம்ப முயற்சிகள் நாணயக் கூட்டுக்களை இலக்கிடல் மற்றும் பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றினை நோக்கி நகர்கின்றமையின் சாத்தியங்களை வலியுறுத்துவதில் காணப்படும் பிரச்சனைகளை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் 1990 களின் பிற்பகுதியில் இலங்கை மத்திய வங்கியில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப ஆராய்ச்சியுடன் தொடங்கின. இது முழுமையாக மிதக்கவிடல் செலாவணி வீதத்தினை நோக்கிப் பெயர்தல், குறிக்கோள்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கூடியளவிற்குச் சந்தைசார்ந்த நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளை நோக்கி நகர்தல், வளர்ச்சி தொடர்பான முதன்மைக் குறிகாட்டிகள் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்கான பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடுகளையும் ஏனைய அளவீடுகளையும் நடத்துவதற்கு ஆரம்பித்தமை, மாதிரியுருவமைத்தல் மற்றும் எதிர்வுகூறல் மீதான ஆரம்ப இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் மற்றும் தொடர்பூட்டலை அதிகரித்தல் என்பன மூலம் மேலும் ஆதரவளிக்கப்பட்டது.[2] நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை நோக்கிய நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் மேம்படுத்தல் ஒதுக்குப் பணத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பாட்டு இலக்கை குறுங்கால வட்டி வீதத்தினால் பதிலீடு செய்தலுடனான இடைக்கால ஏற்பாடுகளுடன் 2015ஆம் ஆண்டில் அலுவலர்கள் ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது. இது பணவீக்க இலக்கிடல் நாடுகளில் பெரும்பாலானவற்றில் அவதானிக்கப்படும் பொதுவான பண்பாகக் காணப்படும். இதனைத் தொடர்ந்து நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினை நோக்கி நகர்வதற்கு முக்கிய முற்தேவைப்பாடாகவுள்ளவற்றில் சிலவற்றை நிறைவேற்றுவதற்கு பல வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன. இவை முக்கியமாக புதிய நாணயக் கொள்கை கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலைப் பின்பற்றுவது தொடர்பில் இலங்கை மத்திய வங்கிக்கும் அரசாங்கத்திற்குமிடையில் இணக்கப்பாடு அடையப்பட்டமை, புதிய கட்டமைப்புடன் பொருந்தத்தக்க விதத்தில் தூண்டுதலளிக்கும் சூழலொன்றினை உருவாக்குவதற்காக தேவையான நிறுவன ரீதியான மற்றும் சட்டவாக்க மாற்றங்கள் போன்றவற்றை ஆரம்பித்தமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், இலங்கை மத்திய வங்கியின் மாதிரியுருவமைத்தல் மற்றும் எதிர்வுகூறல்


2 நாணயக் கொள்கைச் செய்முறையினை மேம்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் முயற்சிகளினது முன்னேற்றம் தொடர்பான மேலும் விபரங்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை - 2007இன் சிறப்புக் குறிப்பு கட்டுரை 1 இனைப் பார்க்கவும் ('நாணய இலக்கிடல் கட்டமைப்பிலிருந்து பணவீக்க இலக்கமிடலை நோக்கி நகர்தல்') மற்றும் 'நாணயக் கொள்கையினை மாதிரியுருவமைத்தல் அடிப்படையில் அணுகுதல் மீதான விபரங்களுக்கு ஆண்டறிக்கை 2016இன் சிறப்புக்குறிப்பு 1இனைப் பார்க்கவும் ('இலங்கையில் நாணயக் கொள்கைப் பகுப்பாய்வினை மாதிரியுருவமைத்தல் அடிப்படையில் அணுகுதல்').

**வரைபடம் 2: இலங்கை மத்திய வங்கியில் மாதிரியுருவமைத்தலை அடிப்படையாகக் கொண்ட உள்ளீடுகளுடன் நாணயக் கொள்கை உருவாக்கச் செய்முறை**




மூலம்: இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கை 2016

### வரைபடம் 3: உலகம் முழுவதிலுமுள்ள நாணயக் கொள்கைக் கட்டமைப்புக்கள்




Source: Annual Report on Exchange Arrangements and Exchange Restrictions series, IMF, 2016

இயலாற்றலானது, ப.நா.நிதிய உதவியுடன் நடுத்தரகால எறிவுகளுக்கான காலாண்டு எறிவு மாதிரியொன்றுடன் கூடிய எதிர்வுகூறுதல் மற்றும் கொள்கை பகுப்பாய்வு முறைமை மற்றும் அண்மைக்கால எறிவுகளுக்கான ஒரு சில மாதிரிகளுடன் மேம்படுத்தப்பட்டு வருகின்றது.[3] இலங்கை மத்திய வங்கியில் பின்பற்றப்பட்டு வருகின்ற மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட உள்ளீடுகளினால் ஆதரவளிக்கப்பட்ட முன்னோக்கிய நாணயக் கொள்கை உருவாக்கம் வரைபடம் 2இல் விளக்கப்பட்டுள்ளது. உள்ளக மற்றும் வெளியக தொடர்பூட்டல் இரண்டையும் கவனத்தில் கொண்ட இலங்கை மத்திய வங்கியின் தொடர்பூட்டல் உபாயமும் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை உறுதிப்படுத்தும் முயற்சியொன்றாக, பெருமளவு தெளிவானதன்மை, வெளிப்படைத்தன்மை மீதான கூடியளவு கவனத்துடன் படிப்படியாக முன்னேற்றம் கண்டுவருகின்றது. மேலும், அண்மைக்கால உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளின் அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வு, நடுத்தர கால எறிவுகள் மற்றும் நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்கு வருவதற்கு முன்னதாக அலுவலர் மட்டக் கூட்டத் தொடர்களில் இடர்நேர்வுப் பகுப்பாய்வுகள் என்பன மூலம் நாணயக் கொள்கை உருவாக்கம் தொடர்பிலான உள்ளகச் செய்முறைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலின் நடைமுறைப்படுத்தலுக்கு வசதியளிப்பதற்கும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுகை மற்றும் சுயாதீனத்தினை உயர்த்துவதுடன் விலை உறுதிப்பாட்டினை முக்கிய குறிக்கோளாக நிறுவுவதற்கு 2018 தொடக்கத்தில் அமைச்சரவையின் ஒப்புதலுடன் நாணய விதிச் சட்டத்தைத் திருத்துவதற்கான வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கி மீதான வரைவு மசோதா, விலை உறுதிப்பாட்டு பொறுப்பாணை, இலங்கை மத்திய வங்கியின் அதிகரித்த சுயாதீனம் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை, மட்டுப்படுத்தப்பட்ட இறை ஆளுகைச் சூழலொன்றில் அதிகரித்த இறை - நாணய இணைப்பு ஆகிய ஏற்பாடுகளுடனும் பணவீக்க இலக்கிடல் மீதான தெளிவான ஏற்பாடுகளுடனும் 2019 நவெம்பரில் வர்த்தமானப்படுத்தப்பட்டது. எனினும், 2019இல் இடம்பெற்ற அரசியல் அமைப்பு மாற்றமும் அதனைத் தொடர்ந்த கொள்கை முன்னுரிமைகளில் ஏற்பட்ட மாற்றமும் இலங்கையில் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலைப் பின்பற்றுவதனை நோக்கிய பயணத்தில் சிறிதளவு விலகல்களைத் தோற்றுவித்தது. இலங்கை மத்திய வங்கியின் மீளவமைக்கப்பட்ட நாணயச் சபையானது நாணய விதிச் சட்டத்தினைத் திருத்தாமல் 2020 இலிருந்து நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலுக்கு அலுவல்சார் ரீதியில் மாறிச் செல்வதற்கான அதன் சம்மதத்தினை வழங்கியிருந்தது. தற்போதைய நாணயவிதிச் சட்டம் இந்நாணயக் கொள்கை அமைப்பின் மாற்றத்தின உள்வாங்கிக் கொள்வதற்குப் போதுமான பரந்த தன்மையினைக் கொண்டிருக்கிறது என்ற கருத்தினை நாணயச் சபை கொண்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கி 2020இல் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலைப் பின்பற்றத் தொடங்கியது. இந்நாணயக் கொள்கை அமைப்பின் கீழ் தொழிற்படுகின்ற மற்றைய பல மத்திய வங்கிகளைப் போன்றே இலங்கை மத்திய வங்கியும்

3 இலங்கைக்காக அபிவிருத்தி செய்யப்பட்ட காலாண்டு எறிவு மாதிரி தொடர்பான மேலதிக விபரங்களை Amarasekara et. al, (2018) என்ற கட்டுரையில் காணமுடியும்.

பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களுக்கும் பேரண்ட பொருளாதார வழிகாட்டலை வழங்கும் நோக்குடன் நடுத்தர கால எறிவுகளைக் கொண்டுள்ள நாணயக் கொள்கை அறிக்கைகளை 2021இல் வெளியிடத் தொடங்கும்.

### 5. முடிவுரை

கடந்த காலத்தில், நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் பரிணாமம் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டுவந்திருப்பதுடன் இச்செய்முறை தொடர்ந்தும் வளர்ச்சியுற்று வருகிறது. 1990களின் பிற்பகுதியிலிருந்து முக்கியமாக மத்திய வங்கிகளிடையே நற்பெயரைப் பெற்றிருக்கின்ற பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு அண்மைய ஆண்டுகளில் தோற்றம்பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களினால் அதிகரித்தளவிற்குப் பின்பற்றப்பட்டு வருகின்றமைக்கு பணவீக்கத்தினை விரும்பத்தக்க மட்டத்தில் உறுதிப்படுத்துவதில் காணப்பட்ட அதன் காத்திரமான தன்மை, மேம்பட்டு வருகின்ற வெளிப்படைத்தன்மை மற்றும் மத்திய வங்கிகளின் நம்பகத்தன்மை என்பன காரணங்களாக அமைந்தன (வரைபடம் 3). இக்கட்டமைப்பானது விதிகள் மற்றும் தற்றுணிவு இரண்டையும் இணைப்பதுடன் இதன் காரணமாக இது "கட்டுப்படுத்தப்பட்ட தற்றுணிபு" என்ற பொதுவான பண்புகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. நாணயக் கொள்கைக் கருவிகளைத் தெரிவுசெய்வதற்கான சுயாதீனம், இறை ஆதிக்கத்திலிருந்தான சுதந்திரம், ஆற்றல்வாய்ந்த நிதியியல் முறைமை, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதம், ஆற்றல்வாய்ந்த தொழில்நுட்பக் கட்டமைப்பு மற்றும் வெளிப்படையான கொள்கைகள் மற்றும் தொடர்பூட்டல்கள் போன்ற முற்தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், Adrian et. al. (2018) பணவீக்க இலக்கிடலுக்குப் புதிதாக நுழைந்தவர்கள் அனைத்து மைல்கற்களையும் கடக்க வேண்டிய அவசியமில்லையெனவும், கடந்த பல தசாப்தங்காக வீதிகள் பரீட்சிக்கப்பட்டு சுமுகமாக்கப்பட்டிருப்பதனால் தொழில்நுட்ப இயக்கவாற்றலைப் பொறுத்து எந்தவொரு நேரத்திலும் அவர்கள் இப்பாதைக்குள் நுழையமுடியும் எனவும் குறிப்பிடுகின்றனர். அனைத்து முற்தேவைப்பாடுகளுக்குப் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை எனினும் இலங்கை இப்பாதையில் தற்பொழுது பயணத்தினை தொடங்கியிருக்கின்றது. பயணத்தின் ஆரம்பத்தில் சில குழப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்ற போதும் இறை மற்றும் நாணய ஒழுக்கங்கள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை போன்ற விதிகளும் போக்குவரத்து ஒழுக்காறுகளும் கவனமாகப் பின்பற்றப்படுகின்றமை நீண்டகால உறுதியான வளர்ச்சிக்கு உறுதியளிக்கும் விதத்தில் பொருளாதாரம் சுமுகமாகப் பயணம் செய்து தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கம் எனும் விரும்பிய சேரிடத்தினைப் பாதுகாப்பாக அடைவதனை உறுதிப்படுத்தும்.

### உசாத்துணை நூல்கள்


Adrian, T., Laxton, D., and Obstfeld, M., 2018, 'Advancing the Frontiers of Monetary Policy', International Monetary Fund

Amarasekara, C., Anand, R., Ehelepola, K., Ekanayake, H., Jayawickrema, V., Jegajeevan, S.,Kober, C., Nugawela, T., Plotnikov, S., Remo, A., Venuganan, R., and Yatigammana, R., 2018, 'An Open Economy Quarterly Projection Model for Sri Lanka', Working Paper Series- WP/18/149, International Monetary Fund

Blot, C. and Hubert, P., 2018, 'Central Bank Communication during Normal and Crisis Times', Policy Department for Economic, Scientific and Quality of Life Policies, European Parliament

Haldane, A., Macaulay, A., and McMahon, M.,2020, 'The 3 E's of Central Bank Communication with Public', Staff Working Paper No. 847, Bank of England

International Monetary Fund, 2015, 'Evolving Monetary Policy Frameworks in Low-Income and Other Developing Countries', Policy paper series

International Monetary Fund, 2016, Annual Report on Exchange Arrangements and Exchange Restrictions series

Lauren, B., Arnone, M., and Segalotto, J., 2009, 'Central Bank Independence, Accountability, and Transparency- A Global Perspective', Palgrave Macmillan, United Kingdom

# தரவுத் தூண்டல் டிஜிட்டல் பொருளாதாரத்தின் வாய்ப்புக்களும் சவால்களும்

**றன்மினி கே. பெரேரா**
மூத்த உதவிச் செயலாளர்
சபைச் செயலகம்
இலங்கை மத்திய வங்கி

**டிஜிட்டல் பொருளாதாரத்தில் விரைந்த வேகத்தில் தரவினை உருவாக்குதல்**

இன்று, மனிதனின் ஓட்டம் மிகுந்த வேகத்தில் டிஜிட்டல் தகவல்களைச் சுற்றி சுழல்வதன் விளைவாக மிகப்பெரும் தரவுத்தளமொன்று ஏற்பட்டிருக்கிறது. டிஜிட்டல் மயப்படுத்தலின் விரைந்த வேகம் டிஜிட்டல் வடிவத்தில் சேமிக்கப்பட்ட மொத்த உலகளாவிய தகவல்களின் பங்கில் ஏற்பட்ட அதிகரிப்பின் மூலம் பிரதிபலிக்கப்படுகிறது. 2000ஆம் ஆண்டிற்கு அண்மையான காலப்பகுதியில் உலகில் சேமிக்கப்பட்ட மொத்தத் தகவலில் ஏறத்தாழ 25 சதவீதமாக மாத்திரமே காணப்பட்ட இவ்வெண்தொகை 2013இல் ஏறத்தாழ 98 சதவீதத்திற்கு அதிகரித்தது. இந்நிலைமையினை நோக்கும் போது, 15ஆம் நூற்றாண்டில் அச்சு அழுத்தகம் கண்டுபிடிக்கப்பட்டதனூடாக உருவாக்கப்பட்ட தகவல் புரட்சி ஏறத்தாழ 50 ஆண்டு காலப்பகுதியில் தகவல்களின் தொகையினை ஏறத்தாழ இரட்டிப்பாக்கியிருந்தது. எனினும், டிஜிடட்ல் தகவல் தளங்களினூடாக உருவாக்கப்பட்ட மிகப் பெருந்தகவல் எண்ணிக்கைகளின் காரணமாக 2013இல் இக்காலப்பகுதி ஏறத்தாழ மூன்றாண்டுகளுக்குக் குறைக்கப்பட்டது. ஒவ்வொரு விநாடியும் 2.8 மில்லியனுக்கு மேற்பட்ட மின்னஞ்சல்கள் அனுப்பப்படுகின்றன. ஒவ்வொரு விநாடியும் கூகிளில் தகவல்களைத் தேடுவோரின் எண்ணிக்கை 80,000 இற்கு மேல் அதிகரித்திருக்கிறது. ஒவ்வொரு விநாடியும் 82,000 இற்கு மேற்பட்ட யு ரியூப், வீடியோக்கள் 4.4 பில்லியனுக்கு மேற்பட்ட இணையத்தளப் பயன்படுத்துநர்களினால் உலகம்[1] முழுவதிலும் பார்க்கப்படுகிறது. இவையெல்லாம் டிஜிட்டல் தகவல் படைப்பின் வேகத்தினைப் பிரதிபலிப்பனவாகவுள்ளன. அதேவேளை, டிஜிட்டல் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த பொருளாதார பெறுமானம் சந்தை மூலதனமயமாக்கல் நியதிகளில் முதல் 10 கம்பனிகளில் இணையத்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கம்பனிகளின் எண்ணிக்கையூடாகப் பிரதிபலிக்கப்படுகிறது. இதன்படி, உலகளாவிய சந்தை மூலதனமயமாக்கல் நியதிகளில் முதல் நிலையிலுள்ள 10 கம்பனிகளில் ஏழு கம்பனிகள் இணையத்தள தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

டிஜிட்டல் பொருளாதாரத்தின் விரைந்த விரிவாக்கத்தின் காரணமாக தற்போதைய தகவல் புரட்சி பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை உருவாக்கியிருக்கிறது. ஒருபுறத்தில் பௌதீக ரீதியான சில்லறைக் கடைகளில் இடம்பெற்று வந்த நாளாந்த பொருளாதாரக் கொடுக்கல்வாங்கல்கள் தற்பொழுது மெய்நிகர் களஞ்சியங்களை நோக்கி விரைவாக மாற்றமடைந்து வருகின்ற அதேவேளையில், மறுபுறத்தில் நிதியியல், கல்வி, போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதி போன்ற பாரம்பரிய ஏற்பாடுகள் டிஜிட்டல் தளத்திற்கு மாற்றப்பட்டு வருவதன் காரணமாக புவியியல் இடைவெளிகளை நிரப்பியிருக்கிறது. இன்னொரு அம்சம் யாதெனில் இந்நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட பெருமளவு தரவுகளின் காரணமாக வாய்ப்புக்கள் முன்னேற்றங்களைத் தூண்டுகின்றமையாகும். 1.7 பில்லியனக்கும் மேற்பட்ட வெப்தளங்களில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ள உள்ளடக்கம் மாத்திரமே டிஜிட்டல் பொருளாதாரத்தில் கிடைக்கத்தக்க தகவல்களல்ல. வெப்தளங்களின் உலாவி பதிவுகள், அழைப்புப் பதிவுகள் அல்லது ஜிபிஎஸ் இணைப்புக்கள் போன்ற துணை உற்பத்திகள் அல்லது தரவு வெளியேற்றங்கள் தகவல் பகிர்தல்களின் செய்முறையில் உருவாக்கப்படுவதுடன் அவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்ற விடயங்களும் பெருமளவுத் தரவுகளை உருவாக்குகின்றன. டிஜிட்டல் பொருளாதாரத்தில் உருவாக்கப்படுகின்ற பெரும்தொகையான தரவுகள் அனைத்துப் பொருளாதார முகவர்களுக்கும் அளவிறந்த வாய்ப்புக்களையும் நன்மைகளையும் வழங்குகின்றன.

1 இணையத்தள நேரலைப் புள்ளிவிபரங்களை 2020 பெப்புருவரி 03ஆம் நாளன்று உள்ளவாறு https://www.internetlivestats.com இருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

தொழில்நுட்பவியலைத் தூண்டுகின்ற ஏதேனும் நடவடிக்கை, மூலவளங்களைச் சிறந்த முறையில் அணுகுவது அதேபோன்று அவற்றை நேரகாலத்துடன் பின்பற்றுவது போன்றவை. டிஜிட்டல் பொருளாதாரத்தின் மிகப்பெரும் நன்மைகள் சான்றுபடுத்துகின்றவாறு உயர்ந்த பொருளாதார நன்மைகளை உறுதிப்படுத்துகின்றன. எனவே, இலங்கையைப் பொறுத்தவரை, தனியார் துறை, அரச துறை இரண்டும் இத்தகவல் மூலங்களைச் சமநிலையில் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும், உள்ளடக்க வசதிகளை மேம்படுத்தல் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான கட்டமைப்புக்களை நடைமுறைக்கிடும் விடயத்தில் அரச துறையின் வகிபாகம் மேலதிகப் பொறுப்புக்களைக் கொண்டிருக்கிறது.

**டிஜிட்டல் பொருளாதாரத்தின் தரவுத் தூண்டல் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளுதல்**

டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் வியாபாரங்கள் மேற்கொள்ளப்படுகின்ற வழிமுறைகளை மாற்றியமைத்திருப்பதுடன் சேவை வழங்கல்களை மேம்படுத்தி வருவதன் காரணமாக பொருளாதார வாய்ப்புக்கள் விரிவடைந்து வருவதன் மூலம் வளர்ச்சி உத்வேகம் பெறுவதற்கும் உதவுகிறது. பாரம்பரிய வியாபார மாதிரிகள் மாற்றியமைக்கப்பட்டு வருவதற்குப் புறம்பாக, டிஜிட்டல் பொருளாதாரத்தினூடாக உருவாக்கப்பட்ட தரவுகளுக்காகப் பாரிய செயல் விளைவுகளைக் கொண்ட பிரயோகங்களும் காணப்படுகின்றன. இதற்கமைய, உலகம் முழுவதிலுமுள்ள வியாபாரங்களும் கொள்கை வகுப்போரும் அவர்களது நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமாக தகவல்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இலங்கை நிறுவனங்கள் இவ்டிஜிட்டல் பரிமாற்றல்களின் நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கிப் பயணிக்கின்ற வேளையில், தனியார் துறை மற்றும் அரச துறை இரண்டிலும் மேம்பாடுகளுக்கான மேலும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. சந்தைக் கேள்விகளையும் நிரம்பல் நிலைமைகளையும் முகாமைப்படுத்திக் கொள்வதில் அநேக சவால்களை எதிர்நோக்குகின்றதொரு துறையாக வேளாண்மைத் துறை விளங்குகிறது. சந்தைக் கேள்வியை அடையாளம் காண்பது தொடர்பில் குறிப்பாக, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் பிரபல்யமாகக் காணப்பட்ட சில்லறை வெப்தளங்களினூடாக உருவாக்கப்பட்ட வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்களைப் பயன்படுத்துவதனூடாக இப்பிரச்சனைகளை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடியும். சந்தைக் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்குக் குறிப்பிட்ட பயிருக்கான பயிர்ச்செய்கை நிலப்பரப்பினைத் திட்டமிடுவதற்கு இதனைப் பயன்படுத்த முடியும். அதேவேளை, விதைகள், வளமாக்கி மற்றும் நீர் என்பனவற்றின் பங்கீடு அத்துடன்/ அல்லது விற்பனை மீதான பதிவுகள் செய்மதி பிம்பத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களுடன் சேர்ந்து தெரிவுசெய்யப்பட்ட பண்டங்களுக்கான வேளாண்மை உற்பத்திகளின் நியதிகளில் உள்ளார்ந்த வழங்கல் மதிப்பீடுகளை வழங்குகிறது. இத்தரவுகளை ஒன்றுசேர்ப்பதன் மூலம் நிரம்பல்மற்றும் கேள்வி நிலைமைகளைச் சமப்படுத்துவதற்கான சாத்தியமான வழிமுறைகளை அடையாளம் காணமுடியும். இது உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் மட்டும் நன்மைகளை வழங்குவது மாத்திரமன்றி, உற்பத்திச் செய்முறையில் பயன்படுத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் உதவும்.

ஒவ்வொரு விநாடியும் இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் பாரியளவில் இடம்பெறுகின்ற, விரைந்த வேகத்தில் தரவுப் பதிவேடுகள் உருவாக்கப்பட்டு வருகின்ற துறையாக நிதியியல் துறை காணப்படுகிறது. இக்கொடுக்கல்வாங்கல்கள் மளிகைக் கடையொன்றின் கொடுப்பனவாகவோ, வியாபாரமொன்றினை ஏற்படுத்துவதற்காக கடனொன்றைப் பெறுவதாகவோ அல்லது பன்னாட்டுக் கொள்வனவின் பொருட்டு வெளிநாட்டுக் கொடுப்பனவொன்றைப் பெறுவதாகவோ அல்லது பன்னாட்டுக் கொள்வனவின் பொருட்டு வெளிநாட்டுக் கொடுப்பனவொன்றைச் செய்வதாகவோ இருக்கலாம் என்பதுடன் மொத்தமாக இவை பொருளாதாரமொன்றிற்குள் பாய்கின்ற மூலவளங்களின் பல்வேறு முகங்களை எடுத்துக்காட்டுவனவாகவுள்ளன. இதற்கமைய, உள்நாட்டு அதேபோன்று வெளிநாட்டுப் பொருட்கள் மற்றும் பணிகளுக்கான பொருளாதார முகவர்களினால் எதிர்பார்க்கப்படும் மூலவளங்களின் தன்மை மற்றும் நேரக் கட்டமைப்பு மீதான தகவல்களை இவ்வொன்று சேர்ந்த தகவல்களைக் கண்காணிப்பதன் மூலம் நேரக் கட்டமைப்பொன்றில் பிரித்தெடுத்துக் கொள்ளலாம். எனவே, இத்தரவினை கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளை அடையாளம் காணவும். மத்திய வங்கி உட்பட நிதியியல் மற்றும் அரச துறை நிறுவனங்கள் இரண்டிற்குமான மூலவளங்களைத் திட்டமிடுதற்கான முக்கியமான தகவல்களை வழங்கவும் பயன்படுத்த முடியும். இத்தகவல்களைச் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை வழங்குவதற்கும் கொடுகடன் அட்டை மற்றும் பற்று அட்டையூடான நிதிகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதனை அடையாளம் காணவும் பணம் தூயதாக்கலைத் தடைசெய்யவும் இடர்நேர்வுகளைத் தணிக்கவும் பயன்படுத்த முடியும்.

போக்குவரத்துத் துறையிலுள்ள பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. போக்குவரத்துத் துறை மீதான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான கணனிவழி அதேநேரப் பிரயோகங்கள் காணப்படுவதுடன் இத்தகவல்கள் வழித்தடம்களை வினைத்திறனுடன் திட்டமிடுவதற்கும் போக்குவரத்தினைக் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை உட்பட, குறிப்பாக, அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலுள்ள அநேக நகர்ப்புற நகரங்களினால் எதிர்நோக்கப்படுகின்ற பொதுமக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வினை வழங்குகின்ற

விதத்தில் போக்குவரத்துப் பாய்ச்சலை உச்சப்படுத்துவதற்கு அதேநேரப் போக்குவரத்துத் தரவுகள் பயன்படுத்தப்பட்டமைக்கு பிலிப்பைன்ஸ் உதாரணமாக விளங்குகிறது. அவ்வாறு அடையப்பட்ட நன்மைகள் முழுமையாக சமூகத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்நன்மைகள் தனிப்பட்டவர்களுக்கும் கிடைத்திருக்கின்றன. அத்தகைய சம்பவங்களிலொன்றாக விமானப் பயணச்சீட்டுக்களின் விலைகள் அது விற்பனை செய்யப்படும் நேரத்தின் அடிப்படையில் வேறுபடுவதனால் விமானப் பயணச்சீட்டினைக் கொள்வனவு செய்வதற்கான மிகச்சிறந்த சாத்தியமான நேரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதனைக் குறிப்பிடலாம். இப்பிரச்சனையினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, புறப்படுகின்ற நாடுகளுடன் தொடர்பான விதத்தில் விமானப் பயணச்சீட்டொன்றின் விலைகளை மதிப்பிடுகின்ற விதத்தில் மாதிரியொன்றினை உருவாக்குவதற்காக விமான நிறுவனங்களினால் விமானப் பயணச்சீட்டு விலைகள் மீது பல்வேறுபட்ட அதேநேர தளங்களில் தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன. இப்பிரயோகங்கள், டிஜிட்டல் வடிவத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள விமானப் பயண விபரங்கள் மீதான தரவுகளைப் பயன்படுத்துவதனூடாக விமானப் பயணிகள் தமது பயணச் சீட்டுக்கள் மீதான பணத்தினைச் சேமிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குகிறது. அநேக துறைகளில் இதேபோன்ற பிரயோகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்ற வேளையில் இலங்கையில் அபிவிருத்திக்காக இத்துறையில் மேலும் உள்ளார்ந்த வளங்கள் காணப்படுகின்றன.

டிஜிட்டல் வலையமைப்பினால் உருவாக்கப்பட்ட அத்தகைய தரவுகள் நலத் துறைக்கு உதவி புரிந்துள்ளமைக்கு அநேக சம்பவங்கள் சான்றாகவுள்ளன. 2009ஆம் ஆண்டுப்பகுதியில் ஐ.அமெரிக்காவின் வைரஸ் காய்ச்சல் பற்றியும் அந்நோய் பரவி வருகின்றமை பற்றியும் மருத்துவ அறிக்கைகளூடாக தகவல்கள் கிடைத்த போதும் இத்தகவல்களை இரண்டு வார கால தாமதத்தின் பின்னரே பெறமுடிந்தது. எனினும், பில்லியன் கணக்கான கூகுள் தேடல் விசாரணைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தியதன் மூலமாக கம்பனியானது பாரம்பரிய குறிகாட்டிகளிலும் பார்க்க மிகக் கூடியளவிற்கு நேரகாலத்துடன் உரிய நேரத்தில் வைரஸ்சின் பரவலைக் முன்கூட்டியே தெரிவிக்கக்கூடியதாக இருந்தமை நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதில் தரவினால் தூண்டப்படும் பொருளாதாரம் உள்ளார்ந்த வளத்தினை கொண்டிருப்பதனை எடுத்துக்காட்டியது. மேலும், பாகிஸ்தானில் டெங்கு நோய் பரவல் பற்றி கண்டறிவதற்கு 2013ஆம் ஆண்டுப்பகுதியில் செல்லிடத் தொலைபேசி விபரப் பதிவுகள் பயன்படுத்தப்பட்டதிலிருந்து சான்றுகள் பெறப்பட்டது போன்று குறைந்த தகவல் தொழில்நுட்பவியலினால் தூண்டப்படும் பொருளாதாரங்களில் கூட இதேபோன்ற அனுபவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதில் இவ்வழிமுறைகள் இப்பொருளாதாரங்களுக்காக மாறாத ஒரே மாதிரியான பொருளாதார வய்ப்புக்களுக்கு உதவுகின்றன.

மேலும், இத்தொழில்நுட்பங்களும் அதனுடன் இணைந்த தரவுகளை உலக வங்கியின் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகள் போன்ற தேசிய மட்டத்திலான குறிகாட்டிகளில் அபிவிருத்தியை மேற்கொள்ளப் பயன்படுத்த முடியும். இது குறிப்பாக, குறைந்தளவிற்கு அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் பாரம்பரியமான தரவு மூலங்களூடாகச் சேகரிக்கப்பட்ட தரவுகளின் திருப்திகரமான மட்டத்தினைக் கொண்டிராத துறைகளுக்கும் பயன்மிக்கதாக இருக்கும். இதன்படி, ஆப்கானிஸ்தானிலும் சூடானிலும் குடித்தொகை மதிப்பீடுகளையும் வறுமை நிலைமையினையும் அளவிடுவதற்கு அநாமதேய செல்லிடத் தொலைபேசி அழைப்புப் பதிவுகளும் செய்மதி பிம்பப்படுத்தலும் பயன்படுத்தப்படுகின்றன. பொருளாதார மற்றும் சமூக குறிகாட்டிகளை அளவிடுவதற்குப் புறம்பாக, சமூக வலைத்தளங்களில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தகவல்கள் பொருளாதார முகவர்களின் நோக்கில் நுண்ணிய விடயங்களை வழங்கக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கின்றன. இதனை அரச துறை, தனியார் துறை இரண்டும் பயன்படுத்த முடியும். இவ்விடயங்களின் அடிப்படையில், டிஜிட்டல் தொழில்நுட்பங்களிலிருந்து உருவாக்கப்படுகின்ற தகவல்களிலிருந்து அநேக நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இவை தெளிவான சான்றுகளாக விளங்குகின்றன.

**சவால்களுக்கு மத்தியிலும் அனைத்தையுமுள்ளடக்கிய அபிவிருத்திகளை உறுதிப்படுத்தல்**

டிஜிட்டல் பொருளாதாரம் அநேக வாய்ப்புக்களை வழங்குகின்ற போதும், டிஜிட்டல் பொருளாதாரத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தல் மற்றும் தனிப்பட்டவர்களின் பாதுகாப்பினையும் அந்தரங்கங்களையும் அதேபோன்று பொதுவகக சமூகத்தின் அடிப்படை உரிமைகளையும் சமூகப் பெறுமானங்களையும் பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில் அனைத்து ஆர்வலர்களும் சமமான விதத்தில் அணுகுவதனை உறுதிப்படுத்துகின்றதுமான இரண்டு நியதிகளிலும் கட்டுப்படுத்தப்படுவதற்கு அநேக சவால்கள் காணப்படுகின்றன.

பகிரப்பட்ட டிஜிட்டல் எதிர்காலம் தொடர்பான உலக பொருளாதார அரங்க வெளியீடு “அனைத்தையுமுள்ளடக்கிய விடயங்களைக் கட்டியெழுப்புதல், நம்பகத்தன்மை மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் டிஜிட்டல் சமூகம்” என்பனவற்றிற்காகப் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஆறு இலக்குகளை எடுத்துக்காட்டுகிறது. இதில், “முதலாவது எவரையும் பின்தங்கவிடக்கூடாது” என்பதாகும். விரைவுபடுத்தப்பட்ட டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட சூழலொன்றில் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றங்கள் இரண்டிற்கும் டிஜிட்டல் தளத்தினை அணுகக்கூடியதாக இருப்பது அவசியமாகும். பொருளாதார வாய்ப்புக்களுக்கான அணியொன்றிற்கு இணையத்தளம் அணுகுவழிகளை வழங்குவது மட்டுமன்றி, டிஜிட்டல் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த வளத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அவசியமான தேர்ச்சியையும் வழங்குகிறது. எனவே, இவ்வாய்ப்புக்களை அணுகுவதற்கான வசதி குறைவாக இருப்பது தற்போதைய தலைமுறையினரின்

முன்னேற்றத்தினை மட்டுமன்றி எதிர்காலத் தலைமுறையினரின் முன்னேற்றத்தினையும் தடுத்துவிடும். மேலும், அணுகும் வசதியும் டிஜிட்டல் பொருளாதாரத்தினை வழிநடத்துவதற்கான அறிவும் இன்றைய நியதிகளில் டிஜிட்டல் ரீதியில் பிரிந்து காணப்படுவது எதிர்காலத்தில் வாய்ப்புக்கள் குறைவடைவதற்கு வழிவகுக்கும். இப்பின்னணியில், இணையத்தள இணைப்பு டிஜிட்டல் உள்ளடக்கத்தினை உறுதிப்படுத்துவதில் முக்கிய மூலமொன்றாக விளங்குகிறது. உலகளாவிய குடித்தொகையில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்களை அடைந்தமையின் மூலம் இணையத்தள இணைப்பு விரைவாக முன்னேற்றம் கண்ட போதும் இணையத்தள நுழைவு வீதம் குறைவடைந்து அனைத்தையும் உள்ளடக்கிய தன்மையினை நோக்கிய அயராத முயற்சியில் காணப்படும் பிரச்சனைகளை எடுத்துக்காட்டியது. வருமானத்தில் காணப்படும் வறுமையின் காரணமாக இணையத்தள இணைப்பினை மேம்படுத்துவதற்கான சவால் டிஜிட்டல் பொருளாதாரத்தின் மிகப் பாதிக்கப்படக்கூடிய துறைகளுக்குள் நுழைவதனை மிகக் கடினமாக்கியிருக்கிறது.


தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் கணனி அறிவு அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள் கணனி அறிவு வீதம் 29.0 சதவீதமாகக் காணப்படுகின்ற வேளையில்[2], டிஜிட்டல் அறிவு வீதம் 42.7 சதவீதமாகக் காணப்பட்டமையினை[3] எடுத்துக் காட்டின. அதேவேளை, வரைபடம் 1இல் காட்டப்பட்டவாறு இணையத்தள மற்றும் மின்னஞ்சல் பயன்பாடு[4] முறையே 26.8 சதவீதமாகவும் 10.2 சதவீதமாகவும் காணப்பட்டது. இப்புள்ளிவிபரங்கள் இலங்கை அதன் தகவல் தொழில்நுட்ப அறிவினை நோக்கிக் கணிசமாளவிற்குப் பயணிக்க வேண்டிய நிலையில் இருப்பதனை எடுத்துக்காட்டியது. இலங்கை அதன் அனைவருக்குமான கல்விக் கொள்கையினூடாக நாட்டில் பாரம்பரிய கல்வி அறிவினை மேம்படுத்துவதில் பாராட்டத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ள போதும் தகவல் தொழில்நுட்ப அறிவு வீதம், இலங்கை புதிய கல்விச் சீர்திருத்தங்களைப் பின்பற்றுவதிலும சரியான நேரத்தில் அதன் கல்வி முறைமையினை அபிவிருத்தி செய்வதற்கான முதலீட்டினை மேற்கொள்வதிலும் தாமதம் காணப்படுவதனை எடுத்துக்காட்டியது. மேலும், இவ்வாறு கண்டறியப்பட்டவைகள் உலக வங்கியின் டிஜிட்டல் பின்பற்றுதல் சுட்டெண்ணுடன்[5] இசைந்து செல்வதாகக் காணப்படுகிறது. டிஜிட்டல் பின்பற்றுதல் சுட்டெண்ணின் மூன்று துணைச் சுட்டெண்களில், இலங்கையின் தர வரிசை மக்கள் துணைச் சுட்டெண்ணில் மிகக் குறைவாகக் காணப்படுகிறது. மக்கள் துணைச் சுட்டெண் டிஜிட்டல் உலகுடன் இணைக்கப்பட்டுள்ள தனிப்பட்டவர்களின் அளவு மற்றும் தரம், செல்லிடத் தொலைபேசிகளூடாக அணுகும் தன்மை, அடிப்படை

2 ஆளொருவர், அவரோ/ அவளோ சுயமாக கணனியைப் பயன்படுத்தக் கூடியதாக இருப்பின் அந்த ஆள் (5 - 69 வயது) கணனி அறிவினைக் கொண்டவர் எனக் கருதப்படுகிறார்.

3 ஆளொருவர் அவரோ/ அவளோ சுயமாகக் கணனி, லப்டொப், டப்ளட் அல்லது திறன் தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடியவராக இருப்பின் அந்த ஆள் (5-69 வயது) டிஜிட்டல் அறிவினைக் கொண்டவர் எனக் கருதப்படுகிறார்.

4 2018ஆம் ஆண்டில் பன்னிரண்டு மாதங்களில் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது இணையத்தளம்/ மின்னஞ்சல் வசதிகளைப் பயன்படுத்திய 5 இலிருந்து 69 வயது வரையிலான குடித்தொகையினரின் சதவீதமாக வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

**வரைபடம் 1: வசதிக்குட்படுத்தல், நம்பகத்தன்மை மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் டிஜிட்டல் சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கான ஆறு பகிரப்பட்ட இலக்குகள்**




மூலம்: உலகப் பொருளியல் அரங்கு

இணையத்தளம் மற்றும் செல்லிட மற்றும் நிலையாகப் பொருத்தப்பட்ட அகன்றபட்டை என்பனவற்றைப் பரிசீலனையில் கொள்கிறது. 2018இல் ஒவ்வொரு 100 ஆட்களுக்கும் 161 இற்கு மேற்பட்ட தொலைபேசி இணைப்பு மட்டத்தினை இலங்கை அடைந்துள்ள போதும் இணையத்தள நுழைவு ஒவ்வொரு 100 ஆட்களுக்கும் 48.7 இணைப்புக்களாகவே காணப்படுகிறது. இதன்படி, இத்தகவல்கள் நாட்டில் இணையத்தளத்தினை அணுகுவதற்கும் அதனைப் பயன்படுத்துவதற்கும் மேலும் இடமிருக்கிறது என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. எனவே, எவரையும் பின்தங்கவிடக்கூடாது என்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தனியார் துறையினர் உட்பட அனைத்து ஆர்வலர்களும் அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தினை நோக்கிய எமது வாய்ப்புக்களை உயர்த்தும் விதத்தில் டிஜிட்டல் இடைவெளியினை நிரப்புவதற்கு ஒன்றிணைத்தல் வேண்டும்.

இரண்டாவது இலக்கான "பகிரப்பட்ட டிஜிட்டல் எதிர்காலம்" அறிக்கையின் கீழ் எடுத்துக்காட்டப்பட்டவாறு டிஜிட்டல் பொருளாதாரத்தில் வசதிக்குட்படுத்தலை உறுதிப்படுத்துவதனை நோக்கிய இன்னொரு முக்கியமான கூறு யாதெனில் சிறந்த டிஜிட்டல் அடையாளங்களூடாக பயன்படுத்துநர்களுக்கு வலுவூட்டுவதேயாகும். பௌதீக ரீதியான அடையாள ஆவணங்கள் வாக்களிப்பதற்கான உரிமை நியதிகளில் பிரசைகளாக இருத்தல், நிதி மற்றும் கல்விச் சேவைகளை அணுகுதல், பன்னாட்டு பயணம் என்பன தொடர்பில் எமது வாழ்க்கையின் இன்றியமையாததொரு கூறாகும். அதேபோன்று, தற்போதைய பின்னணியில், டிஜிட்டல் அடையாளத்திற்கான அவசியம் டிஜிட்டல் தளத்தினை அணுகுவதற்குத் தேவைப்படுகிறது. இவை டிஜிட்டல் கொடுக்கல்வாங்கலூடாகக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், கணனிவழியில் அதேநேர முறையில் பொருட்களைக் கொள்வனவு செய்தல், கணனிவழியில் விசா விண்ணப்பங்களைச் செய்முறைப்படுத்தல் மற்றும் சமூக வலைத்தளங்களூடாக பரஸ்பரம் செயற்படல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. எனவே, டிஜிட்டல் அடையாளங்களின் பாதுகாப்பும் பந்தோபஸ்தும் டிஜிட்டல் பொருளாதாரத்திலுள்ள வாய்ப்புக்களை அணுகும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நியதிகளில், அதிகரித்து வருகின்ற முக்கியமான வகிபாகத்தினை ஆற்றுகின்றன. இதற்கமைய, டிஜிட்டல் அடையாளங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதன் காரணமாக தனியாக தகவல்கள் மற்றும் அந்தரங்க இரகசியங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான தேவை மிக முக்கியமானதொன்றாக மாறியுள்ளது. எனினும், இக்கரிசனைகள் வசதிகளின் பயன்பாட்டுடன் சமநிலைப்படுத்தப்படல் வேண்டும். வியாபார மாதிரிகள் மென்மேலும் டிஜிட்டல் தளங்களை நோக்கிப் பெயர்ந்த வருவதனால் மக்களுக்காக வியாபாரங்களை உருவாக்குகின்ற மூன்றாவது இலக்கின் கீழ் பிரதிபலிக்கப்பட்டவாறு மக்களுக்காக அவற்றை உருவாக்கும் போது அநேக சவால்கள் தோன்றுகின்றன. அதேவேளை, ஒவ்வொருவரையும் பாதுகாப்பாகவும் பந்தோபஸ்துடனும் வைத்திருப்பதற்காகவும் புதிய நடவடிக்கைகளுக்காக புதிய விதிகளைக் கட்டியெழுப்புவதற்குமான நான்காவது மற்றும் ஐந்தாவது இலக்குகள் டிஜிட்டல் பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களிடமிருந்தும் மாறான செயற்பாடுகளை எதிர்பார்க்கிறது.

**அட்டவணை 1: 2015 - 2019 முதலரைப் பகுதியில் கணனி அறிவு வீதம்**


| துறை | கணனி அறிவு வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 கா1 |
| | | | | | |
| இலங்கை | 27.1 | 27.6 | 28.6 | 29.0 | 30.1 |
| துறை | | | | | |
| நகரம் | 39.2 | 39.2 | 40.5 | 40.4 | 41.5 |
| கிராமம் | 25.5 | 26.1 | 27.1 | 27.5 | 28.6 |
| பெருந்தோட்டம் | 9.0 | 10.4 | 9.1 | 10.8 | 13.7 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பகிரப்பட்ட இறுதி இலக்கு, தரவுத் தடைகளைத் தகர்த்தல், தரவுத் தூண்டல் பொருளாதாரத்திலிருந்தான நன்மைகளை நோக்குதல் என்பனவற்றைக் கொண்டிருந்த வேளையில் ஆர்வலர்களின் நலவுரித்துக்களையும் உறுதிப்படுத்துகின்றது. டிஜிட்டல் பொருளாதாரத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற தரவுகளின் அளவிறந்த தொகையிலிருந்து பிரித்தெடுக்கப்படக்கூடிய பெறுமதி வெளிப்படையானதாக இருக்கின்ற போதும் இவ்வாய்ப்புக்கள் ஒவ்வொருவரையும் பாதுகாப்பாகவும் பந்தோபஸ்துடனும் வைத்திருத்தல், அவர்கள் பற்றிய தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதனைத் தீர்மானிப்பதற்கான பயன்படுத்துநர் வலுவளிப்பு போன்ற மற்றைய இலக்குகளுடன் அளவிடப்படுவது அவசியமாகும். இதன்படி, இத்தரவுகளை வைத்திருக்கும் நிறுவனங்கள் இத்தரவுகளைப் பயன்படுத்தும் போது வர்த்தக ரீதியான, சட்ட, ஒழுங்குமுறைப்படுத்தல், கீர்த்தி, பொறுப்புத் தடைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கலாம். இந்நிறுவன மட்டத்திலான கரிசனைகளுக்குப் புறம்பாக, தேசிய பாதுகாப்பு, குற்றவியல் நீதி, தேசிய பொருளாதார நலன்கள் போன்ற கூடுதலான பிரச்சனைகளும் இது தொடர்பில் தோன்றக்கூடும். ஐரோப்பாவில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பொதுவான தரவு பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் தரவுப் பயன்பாட்டிற்காகக் கொள்கைக் கட்டமைப்பொன்றினை வழங்குகின்றன. இவ்வொழுங்குவிதிகள் பொருத்தமான முறைமைகளூடாகத் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்கும் பயன்படுத்துவதற்கு முன்னர் பயன்படுத்துநரின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதனையும் அத்தகைய தரவுகளின் மீறல்களை அறிக்கையிடுவதற்கும் அல்லது தண்டங்களை எதிர்நோக்குவதற்கும் கம்பனிகளைத் தேவைப்படுத்துகின்றன. கொள்கை முன்னெடுப்புக்களுக்குப்


5 டிஜிட்டல் பின்பற்றல் சுட்டெண் என்பது உலகளாவிய சுட்டெண்ணொன்றாகும். இது, பொருளாதாரத்தின் மூன்று பரிமாணங்களான மக்கள், அரசாங்கம் மற்றும் வியாபாரம் என்பன தொடர்பாக நாடுகளின் டிஜிட்டல் பின்பற்றலை அளவிடுகிறது.

வரைபடம் 2: 5 - 69 வயதிற்கிடைப்பட்ட வீட்டுத்துறை குடித்தொகையினரின் இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் பயன்பாட்டின் பரம்பல் சதவீதம்




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 3: 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 5 - 69 வயதிற்கிடைப்பட்ட வீட்டுத்துறை குடித்தொகையினரால் இணையத்தளம் மற்றும் மின்னஞ்சலை அணுகுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சாதனங்களின் சதவீதம்




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

புறம்பாக, தொழில்நுட்ப மற்றும் சட்ட அணுகுமுறைகள் போன்ற ஏனைய பொறிமுறையினையும் டிஜிட்டல் தரவுகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பாதுகாப்பும் பந்தோபஸ்தும் நிரம்பிய விதத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**முன்னோக்கியப் பயணித்தல்**

இக்காரணிகள் அனைத்தையும் பரிசீலனையில் கொள்கையில், டிஜிட்டல் பொருளாதாரத்தினூடாக உருவாக்கப்பட்ட தரவுகள் முன்னோக்கிப் பயணிக்கும் பெறுமதிமிக்க சொத்துக்களாக வளர்ச்சியடையக்கூடும். எனவே, அனைத்து ஆர்வலர்களும் இவ்வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இதனை விருத்தி செய்வதற்குத் தொடர்ந்தும் கடுமையாக முயற்சித்தல் வேண்டும். இப்பின்னணியில், டிஜிட்டல் இணைப்புக்களை மேம்படுத்துகின்ற வேளையில் குறிப்பாக, அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது முக்கிய சவாலாக விளங்குகிறது. டிஜிட்டல் மயப்படுத்தல் எவ்வாறு பணியாற்றுவ, எவ்வாறு பயில்வது, பயணம் செய்வது மற்றும் மனிதனின் பரஸ்பர நடவடிக்கைகள் அனைத்துடனும் தொடர்புபட்டிருக்குமென்பதனால் அரச துறை வசதிக்குட்படுத்தும் தன்மையினை உறுதிப்படுத்துவதில் முக்கியமான வகிபாகமொன்றினை ஆற்றுகிறது. இதனைக் கல்வி ஊடாகவும் டிஜிட்டல் உட்கட்டமைப்பினை அணுகுவதுனை மேம்படுத்துவதன் மூலமும் மேற்கொள்ள முடியுமாயிருக்கின்ற வேளையில் டிஜிட்டல் சூழல் முறைமையில் தோன்றுகின்ற அவசியமான தன்மைகளைக் கையாள்வதற்கான இயலாற்றலைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் அனைத்துக் கொள்கைகள் மற்றும் சட்டங்களிடையே இணங்கிக் கொள்ளும் தன்மை உட்பட ஆளுகையின் அனைத்து அம்சங்களையும் பலப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

பொருளாதாரக் கொள்கை வகுப்போர் மற்றும் நிதியியல் ஒழுங்குமறைப்படுத்துநர்களைப் பொறுத்தவரையில், இத்துறைகளில் இடம்பெற்று வருகின்ற அபிவிருத்தி மீதான அறிவு அதேபோன்று தேர்ச்சி தொடர்பில் அளிக்கப்பட்டு வருகின்ற பயிற்சி, அபிவிருத்திகளை மதிப்பிடுவதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற அவசியமான கட்டமைப்பு என்பன கவனத்தை வேண்டிநிற்கின்ற அம்சங்களில் சிலவாகும். பொருளாதாரத்திலுள்ள அனைத்து ஆர்வலர்களும் இவ்வாய்ப்புக்களை அணுகுவதற்கு சமமான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கின்றார்கள என்பதனை உறுதிப்படுத்துகின்ற மேலதிகப் பொறுப்புக்களை அரசாங்கம் கொண்டிருக்கின்ற வேளையில் ஆளணியினரையும் உணாவுபூர்வமான தகவல்களையும் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் எடுக்கின்றது. இவ்விடயத்தில், தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்குப் புறம்பாக, அனைத்துப் பொருளாதார முகவர்களினாலும் தொழில்நுட்பங்கள் ஈர்த்துக் கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்களை இயலுமைப்படுத்துகின்ற அனைத்தையுமுள்ளடக்கிய சூழலை அபிவிருத்தி செய்வதும் முக்கியமானதாகும். மேலும், தேசிய புள்ளிவிபரவியல் அலுவலகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்கள் என்பன தொடர்பான குறிப்பிட்ட வலியுறுத்தலுடன் கூடிய விதத்தில் ஒட்டுமொத்த அரச கட்டமைப்பும் இம்முக்கிய அம்சங்களை மெருகூட்டுவதாக அமைதல் வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


"7 Examples of Big Data Use Cases in Real Life - Intellipaat Blog". Intellipaat Blog, 2020, https://intellipaat.com/blog/7-big-data-examples-application-of-big-data-in-real-life/.

Mayer-Schonberger, Victor, and Kenneth Cukier. Big Data: A Revolution That Will Transform How We Live, Work and Think. John Murray, 2013.

World Bank. Information and Communication for Development 2018: Data Driven Development. 2018.

World Economic Forum. Our Shared Digital Future Building an Inclusive, Trustworthy and Sustainable Digital Society. 2018.